بسم الله الرحمن الرحيم

# குழந்தை வளர்ப்பு

நமது குழந்தைகளை மார்க்கப்பற்றுடனும் ஒழுக்கத்துடனும் வளர்க்கும் முறையை குர்ஆன் மற்றும் சுன்னாவின் வெளிச்சத்தில் போதிக்கின்ற மிக முக்கியமான நூல்.


ஆசிரியர்:

**அஷ்ஷைகு முஹம்மது இப்னு ஜமீல் ஜைனூ**

(அவர்கள் மீது அல்லாஹ் கருணை புரிவானாக)

தமிழாக்கம்:

**மவ்லவி அப்துர் ரஹ்மான் மன்பஈ**

மேலாய்வு:

**முஃப்தி உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ்ஸலாம்**



إن هدى الله هو الهدى

دار الهدى

DARUL HUDA

(இஸ்லாமிய) சுவாசத்துக்கு ... அல்லாஹ்வின் நேர்வழியே உண்மையான நேர்வழி

## *About This Book*


| | |
|---|---|
| Name of the Book | : **KUZHANTAI VALARPPU** |
| Author | : Muhammed Ibnu Jameel Zainu |
| Translator | : Aalim Abdur Rahman Manbayee |
| Editor | : Mufti A. Omar Sheriff Qasimi |
| Designers | : Z. Abdul Bari, Muhammed Anas |
| Language | : Tamil |
| Edition | : 4th, May 2019 |
| Total Pages | : 72 |
| Copies | : 3000 |
| Printed by | : Patel Graphics, Chennai-6 |

Price: **Rs. 40/-**

DH-TML 2022

Published by

DARUL HUDA

QUALITY ISLAMIC BOOK PUBLISHER

# 211(102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai-1.
Phone: 044-25247866, 98401 74121
darulhuda.chennai@gmail.com  www.darulhuda.net



All rights belong to Almighty Allaah.

# பொருளடக்கம்


1. பெற்றோர் மற்றும் ஆசிரியரின் பொறுப்பு .............. 10
2. தொழுகையைக் கற்றுக்கொடுத்தல்.................. 13
3. கூடாத செயல்களைப் பற்றி எச்சரித்தல் ............ 14
4. உடலையும் உடையையும் மறைத்தல் ................ 17
5. குணங்கள் மற்றும் ஒழுக்கங்கள் .................. 19
6. இஸ்லாமியப் போர் மற்றும் வீரம்.................. 21
7. இஸ்லாமின் அடிப்படைகள் ........................22
8. ஈமானின் அடிப்படைகள் ..........................23
9. அல்லாஹ் அர்ஷிற்கு மேலே உயர்ந்திருக்கிறான் ........24
10. தொழுகையின் சிறப்பும், அவற்றை விடுவது பற்றிய ........
எச்சரிக்கையும்! ....................................26
11. உளூ செய்தல் .....................................28
12. தொழுகையின் முறை ..............................28
13. முதல் ரக்அத் .....................................29
14. இரண்டாவது ரக்அத்.............................. 31
15. தொழுகையில் ரக்அத்துகளின் எண்ணிக்கை ...........34
16. தொழுகையின் சட்டங்களில் சில ....................35
17. தொழுகை பற்றிய சில நபிமொழிகள் ...............39
18. ஜுமுஆ மற்றும் ஜமாஅத் தொழுகையின் முக்கியத்துவம் 41
19. ஜுமுஆவை அதன் ஒழுங்குமுறைகளோடு தொழுவது ... 43
20. பாடல் மற்றும் இசை பற்றிய சட்டம்..................44
21. தற்காலத்தில் உள்ள பாடல்கள் .....................46
22. பாடல் மற்றும் இசைக்கான நிவாரணம் ..............49
23. அனுமதிக்கப்பட்ட பாடல்.............................50
24. உருவப்படங்கள் மற்றும் சிலைகள் பற்றிய சட்டம் ...... 53
25. அனுமதிக்கப்பட்ட படங்களும் உருவங்களும் ..........57
26. புகைப்பிடித்தல் ஹராம் ............................58
27. தாடியை நீளமாக வைப்பது அவசியம் ...............60
28. பெற்றோருக்கு நன்மை புரிதல்.......................62

# தாருல் ஹுதா

## ஓர் அறிமுகம்

*எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபி முஹம்மது ﷺ அவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாவதாக!*

*இஸ்லாமியச் சகோதர சகோதரிகளே!*

*அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு*

*தாருல் ஹுதாவை அறிமுகம் செய்வதன் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் தாருல் ஹுதாவின் நோக்கம் மற்றும் அதன் பணிகளை விவரிப்பதுடன் அதன் இன்றையத் தேவைகளையும் தங்கள் முன் வைக்கிறோம்.*

## தாருல் ஹுதாவின் உதயம்

*அல்லாஹு தஆலா கூறுகிறான்:*

*அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட ஆண்களும், அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட பெண்களும் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள், (ஒருவர் மற்றவரை) நன்மை செய்யும்படித் தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும், தொழுகையைத் தவறாமல் கடைப்பிடித்து, ஸகாத் கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடப்பார்கள். இத்தகையவர்களுக்கு அதிவிரைவில் அல்லாஹ் அருள்புரிவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனும், ஞானமுள்ளவனும் ஆவான். (அல்குர்ஆன் 9:71)*

*(முஸ்லிம்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார், (மனிதர்களை இஸ்லாம் எனும்) சிறந்ததின் பக்கம் அழைத்து, நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான செயல்களிலிருந்து (அவர்களைத்) தடுத்துக்கொண்டும் இருக்க வேண்டும். இத்தகையவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள். (அல்குர்ஆன் 3:104)*

*நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் ஒரு தவறைக் கண்டால் அதைத் தமது கரத்தால் மாற்றட்டும். அது இயலாவிட்டால் தம் நாவால் மாற்றட்டும். அதுவும் இயலாவிட்டால்*

*உள்ளத்தால் (வெறுத்து விலகி விடட்டும்). இது ஈமானின் (நம்பிக்கையின்) குறைந்தபட்ச அளவாகும். (ஸஹீஹ் முஸ்லிம்)*

*மேலும் கூறினார்கள்: நம்பிக்கையாளர்கள் தங்களிடையே நேசம் கொள்வதற்கும், கருணை காட்டுவதற்கும், அன்பு செலுத்துவதற்கும் உதாரணம் ஒரே ஓர் உடலைப்போல! உடலில் ஏதேனும் ஓர் உறுப்பு பாதிக்கப்பட்டால் அனைத்து உறுப்புகளும் காய்ச்சல் மற்றும் தூக்கமின்மையால் வேதனைப்படுகின்றன. (ஸஹீஹுல் புகாரி)*

*இன்றைய சமுதாயத்தில் சிறியோர் முதல் பெரியோர்வரை பெரும் பாலோருக்கு சரியான மார்க்க அறிவும் முறையான வழிகாட்டலும் அதிகம் தேவை என்பது நாம் அறிந்ததே. ஆகவே, மேற்கூறப்பட்ட இறைவசனங்கள் மற்றும் நபிமொழிகளுக்கிணங்க சமுதாயச் சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவது மார்க்கக் கடமை என்பதை உணர்ந்து, அல்குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப்படையில் அந்த உயர்ந்த பணியை நிறைவேற்றி இறைதிருப்தியை அடைய வேண்டும் என்ற தூய எண்ணத்தில் தொடங்கப்பட்டதுதான் தாருல் ஹுதா.*

## தாருல் ஹுதாவின் பணிகள்

### அழைத்தல்:

*இது இஸ்லாமின் முதல் பணியாகும். உலகில் இப்பணியை இறைத் தூதர்கள் செய்தார்கள். இறுதி இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களுக்குப் பின் அவர்களுடைய சமுதாயத்தினர் அனைவரின் மீதும் இப்பணி கடமையாக்கப்பட்டது. மேன்மைமிகு குர்ஆனும், சிறப்புமிகு நபிமொழியும் இதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. எனவே, இயன்ற அளவு அனைத்து வழிகளிலும் மனித சமுதாயத் திற்கு இஸ்லாமை அறிமுகப்படுத்துவதும் அதன் உயர்வுகளை விளக்கிச் சொல்லி அதன் பக்கம் அழைப்பதும் தாருல் ஹுதாவின் முதல் பணியாகும்.*

### கற்பித்தல்:

*இஸ்லாமை அறிய விரும்பும் சிறுவர்கள், வாலிபர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் மேன்மைமிகு குர்ஆன்,*

சிறப்புமிகு நபிமொழிகளை அவரவர் தகுதிக்கேற்ப கற்றுத் தருவது தாருல் ஹுதாவின் இரண்டாவது பணியாகும்.

## நூல் வெளியிடுதல்:

மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழி இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பேரறிஞர்களால் அரபி மொழியில் எழுதப்பட்ட நூற்களைத் தமிழிலும் ஏனைய உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்து, அந்நூற்களைச் சலுகை விலையில் மக்களுக்கு வழங்குவது தாருல் ஹுதாவின் மூன்றாவது பணியாகும்.

## உதவுதல்:

அல்லாஹுவே அனைவரின் தேவைகள் மற்றும் துன்பங்களை நிவர்த்தி செய்பவன். மிகப் பெரிய வள்ளலாகிய அல்லாஹ் உலகில் ஏழை, எளியோர், நலிந்தோர் ஆகியோரின் துயர் துடைக்கும் வள்ளல் பெருமக்களுக்கு பெரும் வெகுமதிகளை ஈருலகிலும் வழங்குவதாக வாக்களித்துள்ளான். பிறர் துன்பங்களில் பங்கெடுப்பது, பிறர் தேவைகளை நிறைவேற்ற இயன்றவரை உதவுவது முஸ்லிம்களுடைய அடிப்படைப் பண்புகளாகும்.

இந்த உன்னதப் பணிக்காக பைத்துல்மால் (பொது நிதி) ஏற்பாடு செய்து இரக்கச் சிந்தையும், மார்க்கப்பற்றும் கொண்ட வள்ளல் பெருமக்களிடமிருந்து கடமையான, உபரியான தர்மங்களைப் பெற்று அவற்றைத் தேவையுடையவர்களுக்கு வழங்குதல் தாருல் ஹுதாவின் நான்காவது பணியாகும்.

இந்தப் பணிகள் மட்டுமின்றி, இஸ்லாம் முழுமையாக ஒவ்வொருவரின் வாழ்விலும் வரவேண்டும் என்பதற்காகவும், மனித சமுதாயங்களுக்குள் நல்லுறவும், அன்பும், கருணையும், சமூகப் புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் இயன்றவரை அல்லாஹ்வுக்காகத் தொண்டாற்ற வேண்டும் என்பது தாருல் ஹுதாவின் முழு குறிக்கோளாகும்.

இப்பணிகள் அனைத்தும் தொய்வின்றி தொடர்ந்து சிறப்பாக, திறம்பட நடைபெறவும், அவற்றை அல்லாஹ் அங்கீகரிக்கவும், தாங்கள் துஆ செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்வதுடன்,

*தங்களால் இயன்றவரை இப்பணிகளில் பங்குபெறுமாறும் அழைக்கிறோம்.*

*மேற்கூறப்பட்ட பணிகளை விசாலப்படுத்தவும் மேன்மேலும் அவற்றைச் சிறப்புடன் நிறைவேற்றவும் தாருல் ஹுதாவிற்காக கீழ்க்காணும் அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றன:*

*அதாவது மஸ்ஜிது, வகுப்பறைகள், மிகப் பெரிய பொது நூலகம், மொழிபெயர்ப்புப் பணிகளுக்குரிய அறைகள், இஸ்லாமிய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு சகல வசதிகளுடன் கூடிய வளாகம், மார்க்கக் கல்விகள் முழுநேர வகுப்புகளாக நடத்துவதற்குத் தேவையான கல்வி நிலையம், தங்குவதற்குரிய விடுதிகள், புத்தக விற்பனை நிலையம், பல மொழிகளில் இஸ்லாமிய நூற்கள் வெளியிடுவதற்குரிய மூலதனம், மாதாந்தரச் செலவுகளைப் பூர்த்தி செய்வதற்குரிய வசதிகள் போன்ற தேவைகள் உள்ளன.*

*நல்லுள்ளம் கொண்ட மேன்மக்களே! அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பரப்புவதற்கு நீங்கள் கொடுக்கும் தர்மங்கள் நிச்சயம் பேருதவியாக இருக்கும்.*

*மார்க்கத்திற்காகக் கொடுக்கப்படும் தர்மங்களுக்குச் சிறப்புகளும் நன்மைகளும் ஏராளம் உள்ளன.*

*ஆகவே மறுமையின் வீட்டை நாடி, அல்லாஹ்வின் பொருத்தத் திற்காக முடிந்த உதவிகளைச் செய்யுங்கள்!*

*நீங்கள் உங்கள் ஆன்மாக்களுக்காக நன்மையில் எதை முற்படுத்திக் கொள்கிறீர்களோ, அதைத்தான் அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்த தாகவும், மகத்தான கூலியாகவும் பெற்றுக் கொள்வீர்கள்.*

*(அல்குர்ஆன் 73:20)*

*பேராற்றலுடைய அல்லாஹ் இந்த நல்ல திட்டங்களை நிறை வேற்றித்தர போதுமானவன்!*

*அவனிடமே உதவி தேடுகிறோம்! அவனையே முன்னோக்கி நிற்கிறோம்!*

*அன்புடன்,*

**உமர் ஷரீ:ப் இப்னு அப்துஸ்ஸலாம்**

*அல்குர்ஆன் மற்றும் நபிமொழிப் பணியாளன்*

# பதிப்புரை

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்...*

*அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!*

*அல்லாஹ்வின் அருளும் ஈடேற்றமும் நம் அனைவர் மீதும் என்றென்றும் நிலவட்டுமாக!*

*இஸ்லாமிய குழந்தை வளர்ப்பு முறையை மையப்படுத்தி அழகிய சிறுநூல் ஒன்று உங்கள் கரங்களில் தவழ்கிறது.*

*எல்லாம் வல்ல அல்லாஹ் தன் அடியார்களுக்கு வழங்குகின்ற அருட்கொடைகளில் ஒன்று குழந்தை பாக்கியம். அதைப் பெற்ற ஒவ்வொரு தாய் தந்தையரும் தங்கள் குழந்தைகளை இஸ்லாமிய மார்க்கப்படி வளர்க்கக் கடமைப்பட்டுள்ளனர்.*

*தற்காலத்தில் நாகரிகம் என்ற பெயரில் குழந்தை வளர்ப்பு முறை குர்ஆன் மற்றும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுடைய வழிமுறையிலிருந்து மாறுபட்டு வருகிறது. அவ்வாறில்லாமல், குழந்தைகளை அல்லாஹ்வின் கட்டளைப்படி வளர்க்க, குழந்தை வளர்ப்பைப் பற்றி இஸ்லாம் கூறுகின்ற ஒழுக்கங்களை அனைவரும் அறிந்துகொள்வது அவசியம்.*

*ஷைக் முஹம்மது இப்னு ஜமீல் ஜைனூ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் எழுதிய இந்நூலை தமிழாக்கம் செய்து வெளியிடுகிறோம். அல்லாஹ் இந்நூலின் மூலம் மக்களுக்கு நற்பலன் தருவானாக! இந்நூலின் மொழிபெயர்ப்பாளருக்கு அல்லாஹ் முழுமையான உடல் நலத்தையும் நல்லருளையும் வழங்குவானாக!* **‘தாருல் ஹுதா’***வின் பணிகள் சிறப்பாக நடைபெற உதவுவானாக! ஆமீன். அல்லாஹ்வே சிறந்த பாதுகாவலன்!*

*அன்புடன்,*

**உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ்ஸலாம்**

*அல்குர்ஆன் மற்றும் நபிமொழிப் பணியாளன்*

# ஆசிரியர் உரை

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்...*

*“அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகள் விசயத்தில் நீதியோடு நடந்துகொள்ளுங்கள்” என்று அல்லாஹ்வுடைய தூதர் ﷺ கூறியுள்ளார்கள்.*

*(ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)*

*தம் பிள்ளைகளுக்கு நல்லருளை விரும்புகின்ற தாய் தந்தையருக்கும், தம் மாணவர்களுக்கு முன்மாதிரியாக திகழ நாடுகின்ற ஆசிரிய ஆசிரியைகளுக்கும், வெற்றியை நாடுகின்ற மாணவ மாணவியருக்கும், பெற்றோர் பிள்ளைகள் அனைவருக்கும் இந்தச் சிறு நூலை முன்வைக்கிறேன்.*

*இந்நூலைப் படிப்பவர் நற்பயனை அடைய வேண்டும் என்றும் அல்லாஹ் இதனை அவனுக்காகவே செய்த நல்லறமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பிரார்த்திக்கிறேன்.*

*- முஹம்மது இப்னு ஜமீல் ஜைனூ*

# பெற்றோர் மற்றும் ஆசிரியரின் பொறுப்பு

*எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவனையே புகழ் கிறோம்; அவனிடமே உதவி தேடுகிறோம்; அவனிடமே பாவமன்னிப்பு கோருகிறோம்; நம்முடைய மன இச்சைகளின் தீமைகள் மற்றும் நம் செயல்களின் தீமைகளைவிட்டு அல்லாஹ்விடமே பாதுகாவல் தேடுகிறோம். யாரை அல்லாஹ் நல்வழிப்படுத்துகிறானோ, அவரை வழிகெடுப்பவர் எவருமில்லை. மேலும், யாரை அவன் வழிகேட்டில் விட்டுவிடுகின்றானோ அவரை நல்வழிப்படுத்துபவர் எவருமில்லை.*

*அல்லாஹு தஆலா கூறுகின்றான்:*

*"அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரகத்தைவிட்டுப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்." (அல்குர்ஆன் 66:6)*

*தாய், தந்தை, ஆசிரியர், சமுதாயம் ஆகிய அனைவரும் இளம் தலைமுறையினரைப் பற்றி அல்லாஹ்வின் முன்னிலையில் விசாரிக்கப்படுவார்கள். இளம் தலைமுறையினரை நல்லபடியாக வளர்த்தால், வளர்த்தவர்கள் மற்றும் வளர்க்கப்பட்டவர்கள் ஆகிய இருதரப்பாரும் இவ்வுலகிலும் மறுவுலகிலும் நற்பாக்கியம் அடைவார்கள். வளர்க்கின்ற பொறுப்பை அவர்கள் வீணடித்தால் இளம் தலைமுறையினர் துர்பாக்கியம் (சீர்கேடு, சீரழிவு, நாசம்) அடைந்தவர்களாக ஆவார்கள். அதற்கான பாவம் பொறுப்பாளர்களின் தலையில்தான் விழும்.*

*நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:*

*"உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியாவார். உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்பு குறித்து (அல்லாஹ்*

*விடம்) விசாரிக்கப்படுவார்."*

*(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)*

*கல்விப்பணி ஆற்றுவோரே! நபி ﷺ உங்களுக்கு நற்செய்தி கூறுகிறார்கள்:*

*"அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உன் மூலமாக ஒரே ஒரு மனிதருக்கு அல்லாஹ் நல்வழி காட்டுவது, சிவப்பு ஒட்டகங்களைவிட உனக்கு மிகச் சிறந்த (சொத்)தாகும்."*

*(ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)*

*தாய் தந்தையரே! உங்களுக்கும் நபி ﷺ நற்செய்தி கூறுகிறார்கள்:*

*"ஒரு மனிதன் இறந்துவிட்டால், நிலையான தர்மம் அல்லது பயனுள்ள கல்வி அல்லது அவருக்காகப் பிரார்த்தனை செய்கின்ற பிள்ளை ஆகிய மூன்றைத் தவிர அவரின் மற்ற செயல்கள் நின்றுவிடுகின்றன.'' (ஸஹீஹ் முஸ்லிம்)*

*எனவே, குழந்தைகளை வளர்க்கின்ற பொறுப்பை உடையவரே, எல்லாவற்றுக்கும் முதலாவதாக உங்களைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் எதைச் செய்கிறீர்களோ, அது பிள்ளைகளின் பார்வையில் நல்ல செயலாகும். நீங்கள் எதைச் செய்யாமல் விடுகிறீர்களோ, அது அவர்கள் பார்வையில் கெட்ட செயலாகும்.*

*ஆசிரியரும், பெற்றவர்களும் பிள்ளைகளுக்கு முன்னிலையில் நன்னடத்தையை மேற்கொள்வதே அவர்களை வளர்ப்பதற் குரிய சிறந்த முறையாகும்.*

## நமது முதன்மையான கடமைகள்

*1. لَا إِلٰهَ إِلاَّ اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ "லா இலாஹ இல்லல்லாஹ்; முஹம்மதுர் ரசூலுல்லாஹ்" என்கிற வாக்கியத்தை மொழிய*

குழந்தைக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தை சற்றுவளருகின்ற போது, “வணங்கப்படுவதற்குத் தகுதியான வன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வுடைய தூதர் ஆவார்கள்” என்ற அதன் பொருளையும் விளங்கச் செய்யவேண்டும்.

2. அல்லாஹ் இணையில்லாதவன்; தனித்தவன்; நம்மைப் படைத்தவன்; நமக்கு உணவளிப்பவன்; நம்மைக் காப்பவன் என்பதைப் புரியவைத்து, அல்லாஹ்வின் மீதான அன்பையும், நம்பிக்கையையும் பிள்ளையின் இதயத்தில் வளர்க்க வேண்டும்.

3. பிள்ளைகளுக்குச் சொர்க்கத்தைப் பற்றிய ஆசையை ஊட்ட வேண்டும். தொழுது நோன்பு நோற்று தன் பெற்றோருக்குக் கட்டுப்பட்டு நடந்து, அல்லாஹ்வுக்குத் திருப்தியளிக்கின்ற செயலைச் செய்பவருக்கே சொர்க்கம் கிடைக்கும் என்பதை எடுத்துக் கூறவேண்டும். நரகத்தைப் பற்றிய பயத்தை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். தொழுகையை விட்டவர், தம் பெற்றோருக்கு மாறு செய்தவர், அல்லாஹ்வைக் கோபப்படுத்தக்கூடிய விதத்தில் நடந்துகொண்டவர், அவனுடைய மார்க்கத்தைப் புறக்கணித்தவர், மனிதர்களின் செல்வத்தை மோசடி, பொய், வட்டி போன்ற தவறான வழிகளில் சாப்பிட்டவர் ஆகியோர் நரகம் செல்வார்கள் என்று எச்சரிக்க வேண்டும்.

4. தேவைகளை அல்லாஹ்விடமே கேட்க வேண்டும்; அவனிடம் மட்டுமே உதவி தேட வேண்டும் என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். “நீ கேட்டால் அல்லாஹ்விடமே கேள்! உதவி கோரினால் அல்லாஹ்

விடமே உதவி கோரு!" என்று நபி ﷺ அவர்கள் தம் சிறிய தந்தையின் மகனுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள்.

(ஜாமிவுத் திர்மிதீ)

## தொழுகையைக் கற்றுக்கொடுத்தல்

1. "உங்கள் பிள்ளைகள் ஏழு வயதை அடைந்தால் தொழும் படி அறிவுறுத்துங்கள். பத்து வயதை அடைந்து (தொழா) விட்டால் அதற்காக அவர்களை அடியுங்கள். மேலும், படுக்கையில் அவர்களுக்கு இடையில் பிரித்து விடுங்கள்" (முஸ்னது அஹ்மது)

என்று நபி ﷺ அவர்கள் கூறியிருப்பதால் சிறுவர் சிறுமியருக்குச் சிறுபிராயத்திலேயே தொழுகையைக் கற்றுக்கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் பெரியவர்களாகின்றபோது மிகுந்த பற்றுடன் அதனை நிறைவேற்றுவார்கள்.

அவர்கள் பார்க்கும்படியாக உளூ செய்வது, தொழுவது, அவர்களை மஸ்ஜிதுக்கு அழைத்துச் செல்வது, குடும்பத் தினர் அனைவரும் தொழுகையின் சட்டங்களைத் தெரிந்து கொள்வதற்காக தொழுகையின் சட்டங்கள் அடங்கிய புத்தகத்தைப் படிக்க வேண்டும். இப்படியாக தொழுகையைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இது ஆசிரியர் மற்றும் பெற்றோரின் கடமையாகும். இதில் ஏற்படுகின்ற குறைகளைப் பற்றி அல்லாஹ் அவர்களை விசாரிப்பான்.

2. பிள்ளைகளுக்குக் குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுக்கவேண்டும். ஃபாத்திஹா சூரா (அல்ஹம்து) மற்றும் சிறிய சூராக்கள் ஆகியவற்றை முதலில் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

தொழுகையில் ஓதுகின்ற அத்தஹிய்யாத்தை சொல்லிக் கொடுக்க வேண்டும். மேலும், குர்ஆனை தஜ்வீது முறைப்படி கற்பிப்பதற்காகவும், குர்ஆன், ஹதீஸை மனனம் செய்விப்ப தற்காகவும் ஓர் ஆசிரியரை அவர்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. சிறுவர்கள் ஜுமுஆ மற்றும் ஐங்கால "ஜமாஅத்" (கூட்டுத்) தொழுகையில் கலந்துகொள்ள அவர்களை ஆர்வப்படுத்த வேண்டும். ஆண்களின் வரிசைக்குப் பின்னால் அவர்களை நிறுத்த வேண்டும். அவர்கள் தவறு செய்தால் மென்மையான முறையில் எடுத்துச்சொல்ல வேண்டும். அதட்டவோ, சப்தம் போடவோ கூடாது. அதனால் அவர்கள் தொழுவதையே விட்டுவிடுவார்கள். பின்பு, நாம் குற்றவாளிகளாகி விடுவோம்.

4. ஏழு வயதிலிருந்தே பிள்ளைகளை நோன்பு நோற்கப் பழக்கப்படுத்த வேண்டும். அதனால் பருவமடைகிறபோது அதை இலகுவாகக் கடைப்பிடிப்பார்கள்.

## கூடாத செயல்கள் பற்றி எச்சரித்தல்

1. இறைநிராகரிப்பு, இணைவைத்தல், திட்டுதல், சாபமிடுதல், கெட்ட பேச்சு ஆகியவற்றிலிருந்து விலகியிருக்குமாறு பிள்ளைகளை எச்சரிக்க வேண்டும். இறைமறுப்பு மறுமையில் நஷ்டமடைவதற்கும் நரகத்தில் நுழைவதற்கும் காரணமான பாவம் என்று நளினமான முறையில் அவர்களுக்கு விளக்க வேண்டும். மேலும், அவர்களுக்கு நாம் நல்ல வழிகாட்டியாக இருக்க, அவர்கள் முன்னிலையில் தீயவற்றிலிருந்து நம் நாவைப் பேணவேண்டும்.

2. எல்லா வகையான சூதாட்டத்திலிருந்தும் பிள்ளைகளைத் தடுக்க வேண்டும். உதாரணமாக கேரம்போர்டு, சீட்டுக்கட்டு,

தாயம், பள்ளாங்குழி, வளையம் போடுதல். இவற்றைப் பொழுது போக்குக்காக மட்டுமே விளையாடினாலும் கூட தடுக்க வேண்டும். ஏனெனில், அதுவே பிறகு சூதாட்ட விளையாட்டுகளுக்கு இட்டுச் செல்லும்; அவர்களுக்கிடையில் சண்டை சச்சரவுகளை ஏற்படுத்தும்; செல்வத்திற்கும் நேரத்திற்கும் நஷ்டத்தை ஏற்படுத்தும்; தொழுகைகளை விட்டு தூரமாக்கும்.

3. ஆபாசமான படங்கள் மற்றும் மறைக்கப்பட வேண்டிய உடலுறுப்புகள் மறைக்கப்படாமல் உள்ள உருவப் படங்களைக் கொண்ட பத்திரிகைகள், துப்பறியும் கதைகள், பாலுணர்வைத் தூண்டும் கதைகள், நாவல்கள் ஆகியவற்றைவிட்டும் தடுக்கவேண்டும். ஆபாசங்கள் மற்றும் வன்முறைகள் கொண்ட சினிமாப் படங்களையும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் விட்டும் தடுக்க வேண்டும்.

4. புகைப்பிடிப்பது பற்றி எச்சரிக்க வேண்டும். அது உடலுக்குத் தீங்கு விளைவிக்கும்; புற்றுநோயை உருவாக்கும் என்று மருத்துவர்கள் ஒருமித்துச் சொல்கிறார்கள். புகைப்பிடிப்பதால் பற்கள் மாசுபடுகின்றன; துர்நாற்றம் வீசுகிறது; நெஞ்சுக்குக் கெடுதியை உண்டாக்குகிறது. புகைப்பிடித்தலில் எந்தப் பலனுமில்லை. புகைப்பிடிப்பதும், அதனை விற்பதும் வாங்குவதும் கூடாத செயல் என்பதை விளக்கிச் சொல்ல வேண்டும். புகைப்பிடிப்பதைத் தவிர்த்து அதற்குப் பகரமாக பசுமையான, உலர்ந்த பலவகையான கனிவகைகளைச் சாப்பிடும்படி அறிவுரை கூறவேண்டும்.

5. சொல்லிலும் செயலிலும் உண்மையைக் கடைப்பிடிக்க பிள்ளைகளைப் பழக்கப்படுத்த வேண்டும். நாம் அவர்களிடம் கேலியாகக்கூட பொய் பேசக் கூடாது. அவர்

களுக்கு நாம் வாக்குக் கொடுத்தால் நமது வாக்கை நிறை வேற்ற வேண்டும்.

“யாரேனும் சிறுபிள்ளையிடம் (இங்கே) வா! இதோ, (எடுத்துக்கொள்) என்று சொல்லிவிட்டுப் பின்பு கொடுக்க வில்லையானால் அதுவும் ஒரு பொய்தான்” என்று நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்னது அஹ்மது)

6. இலஞ்சம், வட்டி, திருட்டு, மோசடி போன்றவற்றில் கிடைத்த ஹராமான செல்வத்தின் மூலம் பிள்ளைகளுக்கு நாம் உணவூட்டக் கூடாது. அது அவர்களின் துர்பாக்கியத்திற்கும், அவர்கள் அட்டூழியம் செய்பவர்களாகவும் பாவம் செய்பவர் களாகவும் மாறுவதற்கும் காரணமாகிவிடும்.

7. கோபத்தில் பிள்ளைகளைச் சாபமிடக் கூடாது. ஏனென்றால், துஆவில் நன்மையை வேண்டினாலும் தீமையை வேண்டினாலும் அது ஏற்றுக்கொள்ளப்பட வாய்ப்பிருக்கிறது. ஒருவேளை அதுவே அவர்கள் மேலும் அதிகத் தவறு செய்வதற்குக் காரணமாகலாம். பிள்ளை தவறு செய்தால், “அல்லாஹ் உன்னைத் திருத்தட்டும்” என்று சொல்வதே சிறந்த செயல்.

8. அல்லாஹ்வுக்கு இணைவைத்து வணங்குவது (ஷிர்க்) பற்றி பிள்ளைகளை எச்சரிக்க வேண்டும். அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்தனை செய்வது, அவர்களிடம் உதவி வேண்டுவது, அவர்களிடம் பரிந்துரை கோருவது அல்லாஹ்வுக்கு இணைவைப்பதாகும். அவர்கள் தங்களுக்கே நன்மை, தீமை எதுவும் செய்ய ஆற்றலில்லாத அடிமைகளாக இருக்கிறார்கள். இறந்துவிட்டோரிடம் சென்று பிரார்த்திப்பது, அவர்களிடம் பரக்கத்துகளை ஆதரவு வைப்பது ‘ஷிர்க்’ ஆகும்.

அல்லாஹுதஆலா கூறுகின்றான்: "உனக்கு நன்மையோ தீமையோ செய்ய முடியாத அல்லாஹ் அல்லாதவற்றை அழைக்காதே! அப்படிச் செய்தால் அப்போது நிச்சயமாக நீ (இணைவைக்கின்ற) அநியாயக்காரர்களில் (ஒருவராக) ஆகிவிடுவாய்." (அல்குர்ஆன் 10:106)

## உடலையும் உடையையும் மறைத்தல்

1. பெரிய வயதில் பற்றுதலுடன் கடைப்பிடிப்பதற்காக சிறுபிராயத்திலிருந்தே முறையாக உடலை மறைப்பதற்கு பெண் பிள்ளைகளை ஆர்வமூட்ட வேண்டும். எனவே, குட்டையான ஆடையைச் சிறுமிக்கு அணிவிக்கக் கூடாது. மேலும் பேண்ட், சட்டை இரண்டை மட்டும் அணிவிக்க லாகாது. ஏனெனில், அது ஆண்களின் உடைக்கும் அல்லாஹ்வை நிராகரித்தவர்களின் நடைமுறைக்கும் ஒப்பாகிவிடும். அதோடு இளைஞர்களின் தடுமாற்றத்திற்கும், இச்சை தூண்டப்படுவதற்கும் காரணமாகிவிடும்.

ஏழு வயதிலிருந்தே தலையில் முக்காடு போட்டுக் கொள்ளும்படி கூற வேண்டும். பருவமடைந்ததும் முகத்தை மறைத்துக் கொள்ளும்படியும் அவளின் கண்ணியத்தைக் காக்கும்படியான விசாலமான நீண்ட நன்கு மறைக்கக்கூடிய கருப்பு ஆடையால் தன் உடலையும் ஆடைகளையும் மறைத்துக் கொள்ள வேண்டுமெனவும் கட்டளையிட வேண்டும்.

இதோ திருகுர்ஆன், அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட பெண்கள் அனைவரையும் அழைத்து ஹிஜாபைப் பற்றி இப்படிக் கூறுகிறது:

"நபியே! நீங்கள் உங்கள் மனைவிகளுக்கும், உங்கள் பெண் மக்களுக்கும், அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்களின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலை முந்தானை

களை (தங்கள் முகங்களிலும்) தங்கள் நெஞ்சங்கள் மீது இறக்கிக்கொள்ளும்படி நீங்கள் கூறுங்கள். அதனால், அவர்கள் கண்ணியமானவர்கள் என அறியப்பட்டு, எவருடைய துன்பத்திற்கும் உள்ளாகாதிருப்பதற்கு இது சுலபமான வழியாகும். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும் அன்பானவனாகவும் இருக்கின்றான்." (அல்குர்ஆன் 33:59)

மேலும், அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட பெண்கள் ஒழுக்கமின்றி, ஹிஜாப் அணியாமல், அரைகுறை ஆடையுடன் வெளியில் சுற்றித்திரிவதை அல்லாஹ் கண்டிக்கின்றான்.

"நீங்கள் முந்திய அறியாமைக் காலத்தில் சுற்றித்திரிந்தது போல் வெளியில் சுற்றாதீர்கள்." (அல்குர்ஆன் 33:33)

2. ஒரு பாலார் பிற பாலாரிலிருந்து தனித்துத் தெரியும் பொருட்டு ஒவ்வொரு பாலாரும் தமக்கென்றுள்ள ஆடையையே அணியவேண்டும்; தீமை பயக்கின்ற பழக்கங்கள் அனைத்தையும் விட்டுத் தூரமாக வேண்டும் என பிள்ளைகளுக்கு அறிவுரை கூற வேண்டும். பிற மதத்தவர்களின் கலாசார ஆடையை அணிவதிலிருந்து விலகியிருக்க வேண்டுமென எடுத்துச்சொல்வது அவசியமாகும்.

"பெண்களுக்கு ஒப்பாகின்ற ஆண்களையும், ஆண்களுக்கு ஒப்பாகின்ற பெண்களையும், ஆண்களில் பெண்களைப் போல் நடந்து கொள்பவர்களையும் பெண்களில் ஆண்களைப் போல் நடந்து கொள்பவர்களையும் நபி ﷺ அவர்கள் சபித்துள்ளார்கள்." (ஸஹீஹுல் புகாரீ)

மேலும், நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: "யார் பிற சமுதாயத்தவருக்கு ஒப்பாகிறாரோ அவர் அவர்களைச் சேர்ந்தவராவார்" (சுனன் அபூதாவூது)

## குணங்கள் மற்றும் ஒழுக்கங்கள்

1. எடுப்பது, கொடுப்பது, உண்ணுவது, குடிப்பது, எழுதுவது, விருந்தோம்பல் செய்வது ஆகியவற்றில் வலக்கரத்தைப் பயன்படுத்த குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். மேலும், ஒவ்வொரு செயலின் தொடக்கத்திலும் குறிப்பாக உண்ணும் போதும் பருகும் போதும் 'பிஸ்மில்லாஹ்' (அல்லாஹ்வின் பெயரால்) என்று சொல்வதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். உட்கார்ந்து சாப்பிட, குடிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். முடிந்தபின் 'அல்ஹம்துலில்லாஹ்' (புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே!) என்று சொல்ல கற்றுக் கொடுக்க வேண்டும்.

2. சுத்தமாக இருப்பதற்குப் பிள்ளைகளைப் பழக்கப்படுத்த வேண்டும். நகத்தை வெட்டிக்கொள்ளவும் உணவுக்கு முன்னும் பின்னும் கைகளைக் கழுவிக்கொள்ளவும் பழக்கப் படுத்த வேண்டும். மலஜலம் கழித்தபின் சுத்தம் செய்து கொள்வதையும் கற்றுக்கொடுக்க வேண்டும். சிறுநீர் கழித்த பின்பு டிஸ்ஸு போன்றவற்றால் துடைக்க வேண்டும்; அல்லது நீரால் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டும். "சிறுநீர் ஆடையில் படுவதன் மூலம் ஆடையை அசுத்தப்படுத்திக் கொள்ளக் கூடாது. சுத்தமாக இருந்தால்தான் தொழுகை கூடும்" என்பதையும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

3. பிள்ளைகள் தவறு செய்தால் அவர்களை அவமானப் படுத்தாமல் தனிமையில் மென்மையோடு அறிவுரை கூற வேண்டும். தவறைத் தொடர்வார்களானால் மூன்று நாட்களுக்கு அவர்களுடன் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். அதைவிட அதிகப்படுத்திடக் கூடாது.

4. அதான் (பாங்கு) சொல்லப்படும்போது அமைதியாக இருந்து முஅத்தின் (அதான் சொல்பவர்) சொல்வதைப் போல் சொல்ல வேண்டும். பின்பு நபி ﷺ மீது ஸலவாத் சொல்லி அதானின் துஆவையும் ஓத வேண்டும் என்று பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.

5. சாத்தியமானால் ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனி விரிப்பை வைத்திருக்க வேண்டும். இல்லையென்றால், தனித் தனிப் போர்வையைப் பயன்படுத்த வேண்டும். பெண் பிள்ளைகளுக்குத் தனி அறையையும் ஆண் பிள்ளைகளுக்குத் தனி அறையையும் ஏற்படுத்திக் கொள்வது மிக ஏற்றமானது.

6. குப்பைகளை, அசுத்தங்களை தெருக்களில் எறியாதிருக் கவும் இடையூறு தருபவற்றைப் பாதைகளிலிருந்து அகற்ற வும் பிள்ளைகளைப் பழக்கப்படுத்த வேண்டும்.

7. தீய நட்பு பற்றி எச்சரிக்க வேண்டும். தெருக்களிலே அவர் கள் நின்றுகொண்டிருப்பதைக் கண்காணிக்க வேண்டும்.

8. வீட்டிலும் தெருவிலும், (நீங்கள் ஆசிரியராக இருந்தால்) வகுப்பிலும் பிள்ளைகளுக்கு சலாம் கூற வேண்டும். முழுமையாக 'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாதுஹு' எனக் கூற வேண்டும்.

9. பக்கத்து வீட்டுக்காரருக்கு நன்மை செய்ய வேண்டும்; அவர்களுக்குத் துன்பம் கொடுக்கக் கூடாது என பிள்ளை களுக்கு அறிவுரை கூற வேண்டும்.

10. விருந்தாளியைக் கண்ணியப்படுத்தவும் மரியாதை செய்யவும் அவருக்கு விருந்தோம்பல் செய்யவும் பிள்ளைகளைப் பழக்கப்படுத்த வேண்டும்.

# இஸ்லாமிய போர்[2] மற்றும் வீரம்

1. குடும்பத்தினருக்கும் மாணவர்களுக்கும் மார்க்கக் கல்வியைப் படித்துக் கொடுப்பதற்காக ஒரு தனி அமர்வை ஏற்படுத்திக் கொள்வது சிறப்பு. அதில் நபி ﷺ அவர்கள் மற்றும் அவர்களின் தோழர்கள் வாழ்க்கை வரலாறு பற்றி பேசுகின்ற நூலைப் படித்துக்காட்ட வேண்டும்.

அவர்களுக்கு நாம் கூற வேண்டும்: "நபி ﷺ அவர்கள் வீரமிக்க வழிகாட்டி என்பதையும், அபூபக்ர், உமர், உஸ்மான், அலீ, முஆவியா f போன்ற நபித்தோழர்கள் பல்வேறு நாடுகளை வெற்றி கொண்டு நாமெல்லாம் நேர்வழி பெறக் காரணமாயிருந்தார்கள். அவர்களின் இறைநம்பிக்கை, அவர்கள் செய்த போர், குர்ஆன் மற்றும் நபிவழிப்படி அவர்கள் செயலாற்றியது, அவர்களின் உயர்ந்த குணங்கள் ஆகியவற்றின் காரணமாகவே அவர்கள் இத்தகைய வெற்றியைப் பெற்றார்கள்."

2. வீரமாக இருக்க வேண்டும்; நன்மையை ஏவ வேண்டும்; தீமையைத் தடுக்க வேண்டும்; அல்லாஹ்வைத் தவிர வேறு எதற்கும் எவருக்கும் அஞ்சக்கூடாது என அறிவுரை கூறிப் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். பொய்கள் மற்றும் கற்பனைகளைக் கூறியும், இருட்டைக் காட்டியும் அவர்களைப் பயமுறுத்தக் கூடாது. யானை, பூனை, பேய், பிசாசு என்று அச்சுறுத்தக் கூடாது.

3. முஸ்லிம்கள் தங்கள் நாடுகளை எதிரிகளிடமிருந்தும் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும் பாதுகாக்க வேண்டும்.

---

2. இஸ்லாமியப் போர் (ஜிஹாது) - அல்லாஹ்வின் மார்க்கத்தை நிலை நாட்டவோ, அநீதி இழைப்போரை அடக்குவதற்கோ, இழந்த இஸ்லாமிய நாட்டை மீட்பதற்கோ செய்யப்படும் போர்.

நம் இளைஞர்கள் இஸ்லாமிய வழிகாட்டுதலின் பக்கம் திரும்பி, அல்லாஹ்வின் பாதையில் போர் செய்து பைத்துல் முகத்தஸையும் ஃபலஸ்தீனையும் மீட்பார்கள். நிச்சயம் அல்லாஹ்வின் உதவியால் வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கையையும் அவர்களுக்குள் விதைக்க வேண்டும்.

4. குர்ஆனில் உள்ள வரலாறுகள், நபி ﷺ அவர்களின் வரலாறு, நபித்தோழர்களில் பிரசித்தி பெற்ற வீரர்கள் பற்றிய வரலாற்றைக் கூறுகின்ற பயனுள்ள புத்தகங்களை வாங்கிக் கொடுத்து, படிக்கத் தூண்ட வேண்டும். அதேபோல், நபி ﷺ அவர்களின் நன்னடத்தைகள், நற்குணங்கள், இஸ்லாமிய ஒழுக்கங்கள், இஸ்லாமிய நம்பிக்கைகள் ஆகியவற்றைப் போதிக்கின்ற நூல்களையும் வாங்கிக் கொடுக்க வேண்டும். இந்நூல்கள் குர்ஆன் மற்றும் சரியான ஹதீஸைக் கொண்டு எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## இஸ்லாமின் அடிப்படைகள்

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்: இஸ்லாம் ஐந்து அடிப்படைகள் மீது அமைக்கப்பட்டுள்ளது. அவை:

1. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாருமில்லை என்றும், முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றும் சாட்சி கூறுவது. (அதாவது, வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாருமில்லை. மேலும், அல்லாஹ்வின் மார்க்கத்தில் முஹம்மது நபி ﷺ அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பது அவசியமாகும்.)

*2. தொழுகையை நிலைநாட்டுவது. (அதன் சட்டங்களையும் ஒழுக்கங்களையும் உள்ளச்சத்துடன் நிறைவேற்றுவது.)*

*3. ஸகாத் கொடுப்பது. (ஒரு முஸ்லிம் எண்பத்தைந்து கிராம் தங்கத்தையோ அதற்கு நிகரான பணத்தையோ உடைமையாக்கி அவரிடம் அது ஒரு வருடம் இருக்கு மானால் அந்த ஒரு வருடம் நிறைவடைந்த பின் அதிலிருந்து நூற்றுக்கு இரண்டரை சதவீதம் ஸகாத்தாகக் கொடுப்பது கடமையாகும். மற்ற பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் அளவு உள்ளது.)*

*4. அல்லாஹ்வின் இல்லமாகிய கஅபா சென்று ஹஜ்ஜு செய்வது. (பயணம் செய்ய சக்தியுள்ளவர் மீது இது கட்டாயக் கடமையாகும்.)*

*5. ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது. (நோன்பு நோற்கின்ற எண்ணத்துடன், உண்பது, குடிப்பது மற்றும் நோன்பை முறிக்கின்ற அனைத்துச் செயல்களைவிட்டும் ஃபஜ்ர் நேரத்திலிருந்து சூரியன் மறைகின்ற வரை விலகி யிருப்பது.) (ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)*

## ஈமானின் அடிப்படைகள்

*1. அல்லாஹ்வை நம்பிக்கை கொள்ள வேண்டும். (அவனுடைய உள்ளமையையும், அவனே நாம் வணங்கத் தகுதியானவன் என்பதையும், அவனுக்கு முழுமையான தன்மைகள் உண்டு என்பதையும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.)*

*2. அவனுடைய மலக்குகளை - வானவர்களை நம்பிக்கை கொள்ள வேண்டும். (அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையைச் செயல்படுத்துவதற்காக ஒளியினால் படைக்கப்பட்டவர்கள்.)*

3. அவனுடைய புத்தகங்களை நம்பிக்கை கொள்ள வேண்டும். (அவை தவ்ராத், இன்ஜீல், ஸபூர் மற்றும் குர்ஆன். இந்நூல்களில் குர்ஆன்தான் மிகச் சிறந்தது.)

4. அவனுடைய தூதர்களை நம்பிக்கை கொள்ள வேண்டும். (அவர்களில் முதன்மையானவர் நூஹ் a அவர்கள். இறுதியானவர் முஹம்மது ﷺ அவர்கள்.)

5. மறுமை நாளை நம்பிக்கை கொள்ள வேண்டும். (அது மனிதர்களிடம் அவர்களின் செயல்கள் பற்றி விசாரிக்கப் படும் நாள்.)

6. விதியை நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும், அதிலுள்ள நன்மை தீமையை நம்பிக்கை கொள்ள வேண்டும். (நம்பிக்கை கொள்வதுடன் நாம் செயல்படவும் வேண்டும். நன்மையாக நடந்தாலும் தீமையாக நடந்தாலும் அது அல்லாஹ்வின் நிர்ணயப்படியே நடக்கின்றது என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.) (ஸஹீஹ் முஸ்லிம்)

மேற்கூறப்பட்ட இஸ்லாமின் அடிப்படைகளையும் ஈமானின் அடிப்படைகளையும் பிள்ளைகளுக்கு விளக்கிக் கொடுத்து மனனம் செய்விக்க வேண்டும்.

## அல்லாஹ் அர்ஷிற்கு மேல் உயர்ந்திருக்கிறான்

மேன்மைமிக்க குர்ஆனும் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களும், சுத்தமான அறிவும் தெளிவான இயற்கையான சிந்தனையும் "அல்லாஹ் அர்ஷின் மீது உயர்ந்து விட்டான்" என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றன. இதுதான் ஸஹாபாக்கள், தாபியீன்கள், இமாம்கள் ஆகியோரின் கொள்கையாகும்.

1. அல்லாஹு தஆலா குர்ஆனில் கூறுகின்றான்:

அர்ரஹ்மான் (அளவற்ற அருளாளன்) அர்ஷின் மீது உயர்ந்துவிட்டான். (அல்குர்ஆன் 20:5)

அதாவது, உயர்ந்தும் மேலோங்கியும் இருக்கிறான் என்று தாபிஊன்கள் விளக்கம் அளித்துள்ளதாக ஸஹீஹுல் புகாரீயில் இடம் பெற்றுள்ளது.

2. ரசூல் ﷺ அவர்கள் ஓர் அடிமைப் பெண்ணிடம், “அல்லாஹ் எங்கே இருக்கிறான்?” என்று கேட்டதற்கு “வானத்தின் மேல்” என்று அந்தப் பெண் பதில் சொன்னார். மேலும், “நான் யார்?” என்று கேட்ட போது, “நீங்கள் அல்லாஹ்வின் தூதர்” என்று பதிலளித்தாள். அப்போது அடிமைப் பெண்ணின் தலைவரைப் பார்த்து, “நீ அவளை விடுதலை செய்துவிடு. அவள் முஃமினான (அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட) பெண்ணாக இருக்கிறாள்” என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

3. தொழுபவர் சுஜூதில்

سُبْحَانَ رَبِّـيَ الْأَعْلٰى

“சுப்ஹான ரப்பியல் அஃலா” (மிக உயர்ந்தவனான என் இறைவன் தூயவன்) என்று கூறுகிறார். மேலும், பிரார்த்தனை செய்கின்றபோது இரு கைகளையும் வானத்தை நோக்கி உயர்த்துகிறார்.

4. குழந்தைகளிடம், “அல்லாஹ் எங்கே இருக்கிறான்?” என்று கேட்டால், “அவன் வானத்திற்கு மேலே இருக்கிறான்” என்று அவர்களின் களங்கமற்ற இயல்பான அறிவின் மூலம் பதில் சொல்லி விடுவார்கள்.

5. “அவனே வானங்களிலும் பூமியிலும் (வணக்கத்திற்குரிய)

*அல்லாஹ்'' (அல்குர்ஆன் 6:3) என்ற குர்ஆன் வசனத்திற்கு விளக்கம் எழுதும் போது இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள், "ஜஹ்மிய்யா என்ற வழிகெட்ட கூட்டத்தினர் கூறுவதுபோல் அல்லாஹ் எல்லா இடத்திலும் இருக்கிறான் என்று நாம் சொல்லக் கூடாது. அல்லாஹ் அர்ஷுக்கு மேல் உயர்ந்து விட்டான் என்பதுதான், குர்ஆன் விளக்கவுரை யாளர்கள் அனைவரின் ஒருமித்த கருத்து" என்று எழுதியி ருக்கிறார்கள்.*

*அவன் அர்ஷின் மீது உயர்ந்து இருப்பதுடன் நம்மைப் பார்ப்பதன் மூலமும் நம் பேச்சைக் கேட்பதன் மூலமும் நம்மோடு இருக்கிறான் என்று பிள்ளைகளுக்கு விளக்கிக் கூற வேண்டும்.*

## தொழுகையின் சிறப்பும் அவற்றை விடுவது பற்றிய எச்சரிக்கையும்

*1. அல்லாஹு தஆலா கூறுகின்றான்:*

*"மேலும், அவர்கள் தங்கள் தொழுகையைப் பேணுவார்கள். அவர்கள் சொர்க்கங்களில் கண்ணியப்படுத்தப்படுவார்கள்."*
*(அல்குர்ஆன் 70:34, 35)*

*"(நபியே!) வஹ்யி மூலம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட இவ்வேதத்தை (மக்களுக்கு) நீங்கள் ஓதிக் காண்பித்து தொழுகையைக் கடைப்பிடித்து வாருங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான செயல்களை விட்டும் பாவங்களைவிட்டும் (மனிதனைத்) தடுத்துவிடும்."*
*(அல்குர்ஆன் 29:45)*

*"மேலும், தொழுகையில் கவனக்குறைவாக இருக்கின்ற (நயவஞ்சக) தொழுகையாளிகளுக்கு கேடுதான்."*
*(அல்குர்ஆன் 107:4)*

(அதாவது, அவர்கள் தகுந்த காரணமின்றி தொழுகையை அதன் நேரத்தில் தொழாமல் பிற்படுத்தக்கூடிய அசட்டை யாளர்கள்.)

"அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்கள் நிச்சயமாக வெற்றியடைந்துவிட்டார்கள். அவர்கள் எத்தகையோர் என்றால் மிக்க உள்ளச்சத்தோடு தொழுவார்கள்."

(அல்குர்ஆன் 23:1-2)

"(இவர்களுக்குப் பின்னர், இவர்களுடைய சந்ததியில்) இவர்களின் இடத்தை அடைந்தவர்களோ மன இச்சைகளைப் பின்பற்றி தொழுகையை(த் தொழாது) வீணாக்கி விட்டவர்கள். அவர்கள் (மறுமையில்) தீமையையே சந்திப்பார்கள்." (அல்குர்ஆன் 19:59)

6. நபி ﷺ அவர்கள் (தம் தோழர்களிடம்) கேட்டார்கள்: "உங்களில் ஒருவரின் வீட்டு வாசலில் ஓர் ஆறு ஓடுகிறது. அதில் அவர் நாள்தோறும் ஐந்து தடவை குளிக்கிறார். அவர் (உடலில்) அழுக்கு எதுவும் எஞ்சியிருக்குமா?" அதற்கு நபித்தோழர்கள், "அவருடைய (உடலில்) அழுக்கு எதுவும் எஞ்சியிருக்காது" என்றார்கள். அப்போது நபி ﷺ "அதே போல்தான் ஐந்து நேரத் தொழுகைகளும்! அல்லாஹ் அவற்றின் மூலம் பாவங்களை அழிக்கிறான்" என்று கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)

7. "நமக்கும் (இஸ்லாமை ஏற்காது அல்லாஹ்வை நிராகரித்தவர்களாகிய) அவர்களுக்கும் மத்தியில் வித்தியாசம் தொழுகையாகும். எவர் அதை விட்டாரோ அவர் அல்லாஹ்வை நிராகரித்தவராகி விட்டார்" என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (முஸ்னது அஹ்மது)

8. "(முஸ்லிமான) மனிதருக்கும் இணைவைப்பு மற்றும்

இறைநிராகரிப்புக்கிடையில் (வித்தியாசம்) தொழுகையை விடுவதாகும்" என்று நபி ﷺ அவர்கள் கூறியிருக்கிறார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

## உளூ செய்தல்

இரு சட்டைக் கைகளையும் முழங்கைகள் வரை உயர்த்திக் கொள்! 'பிஸ்மில்லாஹ்' (அல்லாஹ்வின் பெயரால்) என்று சொல்!

بِسْمِ اللهِ

1. இரு முன்கைகளையும் கழுவிக்கொள்!

2. பல்துலக்கி மூன்று தடவை வாய் கொப்பளித்து நாசிக்கும் தண்ணீர் விடு!

3. முகத்தை மூன்று முறை கழுவு!

4. இரு கைகளை முழங்கைகள் வரையிலும் கழுவு! வலக்கையை முதலிலும் இடக்கையை இரண்டாவதாகவும் மூன்று தடவை கழுவு!

5. காதுகள் உட்பட தலை முழுவதையும் தண்ணீரால் தடவி ('மஸஹ்' செய்து) கொள்!

6. இரு கால்களையும் கரண்டைக்கால் வரை, (வலது காலை முதலிலும் இடது காலை இரண்டாவதாகவும்) மூன்று முறை கழுவு!

## தொழுகையின் முறை

1. தொழுவதற்கு முன் எந்த தொழுகையைத் தொழுகிறோம் என்ற எண்ணம் மனத்தில் இருக்க வேண்டும். அதை வாயால் "இன்ன தொழுகையைத் தொழுகிறேன்" என்று கூறக்

கூடாது. 'நிய்யத்'தின் இருப்பிடம் உள்ளமே! (உதாரணத்திற்கு ஸுப்ஹு தொழுகிறோம் என்று வைத்துக்கொள்.)

2. கிப்லாவை முன்னோக்கி நில்! இரண்டு கைகளையும் இரு காதுகள் வரை உயர்த்தி 'அல்லாஹு அக்பர்' என்று சொல்!

3. வலது கையை இடது கை மீது நெஞ்சின் மேல் வை! அதனைத் தொடர்ந்து கீழ்க்காணும் துஆவை ஓது!

سُبْحَانَكَ اَللّٰهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالٰى جَدُّكَ وَلَا إِلٰهَ غَيْرُكَ

"சுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலாஇலாஹ கைருக." (நபிவழியில் வந்துள்ள வேறு துஆக்களை ஓதுவதும் கூடும்.)

## முதல் ரக்அத்

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

"அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்."

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

"பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்."

இவை இரண்டையும் மெதுவாக ஓத வேண்டும். பிறகு சூரா ஃபாதிஹா ஓத வேண்டும். பிறகு மற்றொரு சூரா ஓத வேண்டும்

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝١ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٢
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٣ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٤
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٥ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ

عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ﴿٧﴾

*"அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். அர்ரஹ்மானிர் ரஹீம். மாலிகி யவ்மித்தீன். இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தஈன். இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் ஙைரில் மக்ழூபி அலைஹிம் வலழ்ழால்லீன். ஆமீன்."*

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

*"பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்."*

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ﴿١﴾ اَللّٰهُ الصَّمَدُ ﴿٢﴾

لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ﴿٣﴾ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ﴿٤﴾

*"குல்ஹுவ வல்லாஹு அஹது. அல்லாஹுஸ் ஸமது. லம் யலித் வலம்யூலத். வலம் யகுல் லஹு குஃபுவன் அஹது." (அல்லது, வேறு ஏதேனும் சூராவை ஓதலாம்.)*

*1. உன் இரு கைகளையும் உயர்த்தி ('அல்லாஹு அக்பர்' என்று) தக்பீர் சொல்!*

*மேலும், குனிந்து 'ருகூஉ' செய்து உன் இரு கைகளையும் இரு முழங்கால்கள் மீது வைத்து*

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ

*"சுப்ஹான ரப்பியல் அழீம்" என்று மூன்று தடவை சொல்!*

*2. ருகூவிலிருந்து தலையை உயர்த்தி, இரு கைகளையும் உயர்த்து! அப்போது*

سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ

*“ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்.”*

رَبَّـنَا لَكَ الْحَمْدُ

*“ரப்பனா லகல் ஹம்து” என்று கூறு!*

*3. தக்பீர் சொல்லி சுஜூது செய்! அப்போது உன் இரு உள்ளங்கைகளையும் இரு முழங்கால்களையும் நெற்றியையும் மூக்கையும் பூமியில் பதிய வைத்து இரு கால்களின் விரல்களை தரையில் கிப்லாவை நோக்கியவாறு வை. பிறகு,*

سُبْحَانَ رَبِّيَ الأَعْلٰى

*“சுப்ஹான ரப்பியல் அஃலா” என்று மூன்று தடவை சொல்!*

*சுஜூதிலிருந்து உன் தலையை உயர்த்தி தக்பீர் சொல்! மேலும், உன் இரு கைகளையும் இரு முழங்கால்கள் மீது வைத்து கீழ்வருமாறு சொல்:*

رَبِّ اغْفِـرْ لِيْ وَارْحَمْنيْ وَاهْـدِنِي وَعَافِـنِيْ وَارْزُقْـنِيْ

*“ரப்பிங்ஃபிர்லீ வர்ஹம்னீ வஹ்தினீ வஆஃபினி வர்ஸுக்னி.”*

*5. தக்பீர் சொல்லி இரண்டாவது சுஜூதைச் செய்! அப்போதும்*

سُبْحَانَ رَبِّيَ الأَعْلٰى

*‘சுப்ஹான ரப்பியல் அஃலா’ என்று மூன்று தடவை கூறு!*

## இரண்டாவது ரக்அத்

*1. இரண்டாவது ரக்அத்துக்கு எழுந்து நில்! அவூது, பிஸ்மி சொல்லி சூரா ஃபாத்திஹாவை ஓது! தொடர்ந்து ஏதேனும் சிறிய சூராவை அல்லது குர்ஆனில் இயன்றதை ஓது!*

2. முன்பு தெரிந்து கொண்டதுபோல் ருகூவும், சுஜூதும் செய்! இரண்டாவது சுஜூதுக்குப்பின் உட்கார்ந்து கொண்டு வலக்கையின் விரல்கள் அனைத்தையும் மடக்கிக்கொண்டு அதன் ஆட்காட்டி விரலை மட்டும் உயர்த்தி அதனை அசை![3] தொடர்ந்து கீழ் வருவதை ஓது:

اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ اَلسَّلاَمُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ اَلسَّلاَمُ عَلَيْنَا وَعَلٰى عِبَادِ اللّٰهِ الصَّالِحِيْنَ أَشْهَدُ أَن لاَّ إِلٰهَ إِلاَّ اللّٰهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலவாது வத்தய்யிபாது. அஸ்ஸலாமு அலைக அய்யுஹன்னபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹூ. அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ.

பொருள்: "காணிக்கைகள், தொழுகைகள் மற்றும் நன்மைகள் அனைத்தும் அல்லாஹ்விற்கே உரியதாகட்டும். நபியே! உங்கள் மீது சலாமும் அல்லாஹ்வின் கருணையும் அவனுடைய பரகத்துகளும் உண்டாகட்டும். நம் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் சலாம் உண்டாகட்டும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். முஹம்மது

3. இதுவும் நபிவழிதான். மேலும், அசைக்காமல் அத்தஹிய்யாத்தின் ஆரம்பத்திலிருந்து விரலை உயர்த்தி இறுதிவரை நீட்டி வைத்திருப்பதும் நபிவழிதான்.

அவர்கள் அவனுடைய அடிமையும் தூதருமாவார்கள் என்றும் சாட்சி சொல்கிறேன்." (ஸஹீஹுல் புகாரீ)

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى إِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى إِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீது. அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீது.

பொருள்: "அல்லாஹ்வே... இப்றாஹீமின் மீதும் இப்றாஹீமுடைய குடும்பத்தார் மீதும் நீ விசேஷமாக அருள் பொழிந்தது போன்று, முஹம்மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் உன் விசேஷமான அருளைப் பொழி! நிச்சயமாக நீ புகழ்மிக்கவன்! கண்ணியத்திற்குரியவன்! அல்லாஹ்வே... இப்றாஹீமின் மீதும் இப்றாஹீமின் குடும்பத்தார் மீதும் பரகத் செய்தது போன்று, முஹம்மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் நீ பரகத் செய்! நிச்சயமாக நீ புகழ்மிக்கவன்! கண்ணியத்திற்குரியவன்!"

(ஸஹீஹுல் புகாரீ)

பிறகு, பின்வரும் துஆவை ஓத வேண்டும்.

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ عَذاَبِ جَهَنَّمَ وَمِنْ عَذاَبِ الْقَبْرِ وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ وَمِنْ فِتْنَةِ الْمَسِيْحِ الدَّجَّالِ

*அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக மின் அதாபி ஜஹன்னம வமின் அதாபில் கப்ரி வமின் ஃபித்னதில் மஹ்யா வல்மமாதி வமின் ஃபித்னதில் மஸீஹித் தஜ்ஜால்.*

பொருள்: *அல்லாஹ்வே! உன்னிடம் கப்ருடைய வேதனையை விட்டும், ஜஹன்னமுடைய (நரக) வேதனையை விட்டும், வாழ்வு மற்றும் மரணத்தின் குழப்பத்தை விட்டும், தஜ்ஜாலுடைய குழப்பத்தை விட்டும் பாதுகாவல் தேடுகிறேன்.*

4. வலப்புறமும் இடப்புறமும் திரும்பு! (அப்படித் திரும்பும்) ஒவ்வொரு முறையிலும்

اَلسَّلاَمُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ

"*அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்*" என்று சொல்!

## தொழுகை ரக்அத்களின் எண்ணிக்கை அட்டவணை

| தொழுகை | முன்சுன்னத் | ஃபர்ளு | பின்சுன்னத் |
|---|---|---|---|
| ஸுப்ஹு | 2 | 2 | - |
| ளுஹர் | 2+2 | 4 | 2 |
| அஸர் | 2+2 | 4 | - |
| மஃரிப் | 2 | 3 | 2 |
| இஷா | 2 | 4 | 2+வித்ரு 3 |

ஜுமுஆ அன்று தஹிய்யதுல் மஸ்ஜிது இரண்டு ரக்அத்கள்

மட்டும் தொழ வேண்டும். முன் சுன்னத் என்று தனியாக எதுவும் இல்லை. அதன் பிறகு ஃபர்ளு இரண்டு ரக்அத்கள் தொழ வேண்டும். பிறகு மஸ்ஜிதில் தொழுதால் இரண்டு, இரண்டு ரக்அதாக மொத்தம் நான்கு ரக்அத்கள் சுன்னத் தொழ வேண்டும். வீட்டில் தொழுதால் இரண்டு ரக்அத் மட்டும் தொழ வேண்டும்.

## தொழுகையின் சட்டங்களில் சில

1. முன் சுன்னத் என்பது ஃபர்ளுக்கு முன்பாகவும் பின் சுன்னத் என்பது ஃபர்ளுக்குப் பின்பாகவும் தொழப்பட வேண்டும்.

2. (ஒவ்வொரு செயலையும்) நிதானமாகச் செய்! சுஜூது செய்யும் இடத்தைப் பார்! (இங்கும் அங்கும்) திரும்பாதே!

3. இமாம் ஓதுவது உன் காதில் விழுந்தால் வாய் மூடி இரு! காதில் விழவில்லையானால் நீயும் அமைதியாக ஓது!

4. ஜுமுஆவின் ஃபர்ளு இரண்டு ரக்அத்துகள் ஆகும். அதைக் குத்பாவிற்குப் பிறகு நிறைவேற்ற வேண்டும். அதை மஸ்ஜிதில் தவிர வேறு இடத்தில் தனியாக தொழக்கூடாது.

5. மங்ரிப் தொழுகையின் ஃபர்ளு மூன்று ரக்அத்துகள். ஸுபுஹில் தொழுததுபோல் இரண்டு ரக்அத்துகள் தொழு! அத்தஹிய்யாத்தை[4] ஓதிமுடிக்கின்ற போது சலாம் சொல்லாமல் தக்பீர் சொன்னவாறு இரு கைகளையும் இரு தோள்பட்டை வரை உயர்த்திய நிலையில் மூன்றாவது ரக்அத் தொழுவதற்கு எழுந்து நில்! ஃபாதிஹா சூராவை மட்டும்

---

4. அத்தஹிய்யாத் என்பது ஸலவாத்துடன் சேர்ந்தே ஓதப்பட வேண்டும். சிலர் எண்ணுவது போல் முதல் இருப்பில் ஸலவாத் ஓதுவது கூடாது என்பது ஏற்றமான கருத்து அல்ல.

ஓதி, ஸுப்ஹு தொழுகையில் நீ கற்றுக்கொண்டது போன்று உன் தொழுகையை நிறைவு செய்! பின்பு வலப்புறமும் இடப்புறமும் சலாம் சொல்!

6. ளுஹர், அஸர், இஷா ஆகிய தொழுகைகளின் ரக்அத்துகள் நான்காகும். ஸுப்ஹு தொழுகையில் செய்ததை அப்படியே செய்! (இரண்டாவது ரக்அத் முடிவில்) அத்தஹியாத்தையும் (ஸலவாத்தையும்) ஓதி முடித்த பின் சலாம் சொல்லாமல் மூன்றாவது ரக்அத் தொழ எழுந்திரு! அடுத்து நான்காவது ரக்அத். இந்த இரண்டு ரக்அத்திலும் நிற்கின்ற போது ஃபாதிஹா சூராவை மட்டும் ஓதவேண்டும். ருகூஃ, சுஜூது, சிறு நிலை, சிறு இருப்பு அனைத்திலும் இதற்கு முன் விவரிக்கப்பட்டதைப் போன்று ஓதவேண்டும். பின்பு வலப்புறம் மற்றும் இடப்புறம் திரும்பி சலாம் சொல்!

7. வித்ரு (தொழுகையின் ரகஅத்துகள்) மூன்று: இரண்டு ரக் அத்துகள் தொழுது சலாம் சொல்! பிறகு ஒரு ரக்அத்தை தனியாகத் தொழுது சலாம் சொல்லி முடி! (மூன்றாவது ரக்அத்தின்) ருகூவுக்கு முன்னால் நபி ﷺ அவர்கள் கற்றுத் தந்துள்ள வார்த்தைகளால் குனூத் துஆ செய்வது சிறப்பு. (அது கீழ்வருமாறு:)

اَللّٰهُمَّ اهْدِنِـيْ فِيْمَنْ هَدَيْتَ وَعَافِـنِيْ فِيْمَنْ عَافَيْتَ وَتَوَلَّنِيْ فِيْمَنْ تَوَلَّيْتَ وَبَارِكْ لِيْ فِيْمَا أَعْطَيْتَ وَقِنِيْ شَرَّ مَا قَضَيْتَ فَإِنَّكَ تَقْضِيْ وَلَا يُقْضَى عَلَيْكَ وَإِنَّهُ لَا يَذِلُّ مَنْ وَالَيْتَ وَلَا يَـعِزُّ مَنْ عَادَيْتَ تَبَارَكْتَ رَبَّنَا وَتَعَالَيْتَ

அல்லாஹும்மஹ்தினீ ஃபீமன் ஹதய்த வஆஃபினீ ஃபீமன்

ஆஃபய்த வதவல்லனீ ஃபீமன் தவல்லய்த வபாரிக்லீ ஃபீமா அஃதய்த, வகினீ ஷர்ர மாகழய்த ஃபஇன்னக்க தக்ழீ வலா யுக்ழா அலய்க வஇன்னஹு லாயதில்லு மன் வாலய்த வலா யஇஸ்ஸு மன் ஆதய்த தபாரக்த ரப்பனா வதஆலய்த
(சுனன் அபூதாவூது)

பொருள்: அல்லாஹ்வே நீ நேர்வழிநடத்தியோரில் என்னையும் நேர்வழி நடத்து. நீ நற்சுகம் அளித்தோரில் எனக்கும் நற்சுகம் அளி. நீ பொறுப்பேற்றவர்களில் என்னையும் பொறுப்பேற்றுக்கொள். நீ கொடுத்தவற்றில் எனக்கு நீ அருள்வளம் தா. நீ முடிவு செய்ததின் தீமையைவிட்டு என்னை பாதுகாத்துக்கொள். நிச்சயமாக நீயே தீர்ப்பளிப்பாய். உன்மீது தீர்ப்பளிக்கப்படாது. நீ நேசித்தவர் கேவலமடையார். நீ பகைத்தவர் கண்ணியமடையார். எங்கள் இறைவனே நீ அருள் நிறைந்தவன், மிக உயர்ந்தவன்.

8. இமாம் ருகூவில் இருந்தாலும் கூட நின்று தக்பீர் சொல்லி, பிறகு அவரைப் பின்பற்றி ருகூவிற்குச் செல்! ருகூவில் இமாமுடன் நீ சேர்ந்துவிட்டால் உனக்கு அது ஒரு ரக்அதாகக் கணக்கிடப்படும். அப்படியில்லாவிட்டால் அது ஒரு ரக்அத்தாக கணக்கிடப்படாது.

9. ஒரு ரக்அத்தோ அதற்கு மேற்பட்ட ரக்அத்துகளோ உனக்குத் தவறிவிட்டால் தொழுகையின் கடைசியில் இமாமுடன் சலாம் சொல்லாமல் மீதமுள்ள ரக்அத்துகளைத் தொழுவதற்கு எழுந்து நில்!

10. தொழுகையில் விரைவாகச் செயல்படுவதைத் தவிர்த்துக் கொள்! ஏனெனில், அது தொழுகையை முறித்துவிடும். நபி ﷺ அவர்கள் ஒரு மனிதர் தம் தொழுகையில் விரைவாகச்

செயல்படுவதைக் கண்டார்கள். அவரிடம், “திரும்பிச் சென்று தொழு! ஏனென்றால், நீ தொழவே இல்லை” என்றார்கள். (இரண்டு தடவை இதுபோல் நடந்த பின்) மூன்றாவது முறையில் அம்மனிதர், “அல்லாஹ்வின் தூதரே (எப்படித் தொழுவதென்று) எனக்குக் கற்றுத்தாருங்கள்” என்றார். அதற்கு நபி ﷺ அவர்கள் இப்படிச் சொன்னார்கள்:

“ருகூவு செய்த நிலையில் நீ அமைதி அடைகின்ற வரை ருகூவு செய்! பிறகு தலையை உயர்த்தி, நின்ற நிலையில் நேராக நிற்கிறாய் என்கிற நிலையை அடையும் வரை நில்! பிறகு சுஜூது செய்யும் நிலையில் நீ அமைதி அடைகின்ற வரை சுஜூது செய்!”(ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)

11. தொழுகையின் வாஜிபுகளில் (அதாவது, முக்கியமான செயல்களில்) ஒரு வாஜிபு உனக்கு விட்டுப் போய்விட்டால் உதாரணமாக, முதல் இருப்பை விட்டுவிட்டால் தொழுகையின் கடைசியில் இரண்டு சஜ்தாக்கள் செய்து சலாம் சொல்லி முடி!

அல்லது தொழுகையின் ரக்அத்துகளில் சந்தேகம் வந்தாலும் குறைந்த அளவு ரக்அத்துகள் தொழுததாக முடிவு செய்து முழுமையாகத் தொழுதபின் அதேபோல் இரண்டு சஜ்தாக்கள் செய்! இதற்கு ‘சுஜூதுஸ் ஸஹ்வு’ (மறதியின் சுஜூது) என்று கூறப்படும்.

12. தொழுகையில் அதிகம் அசைய வேண்டாம். ஏனெனில், அது உள்ளச்சத்துக்கு எதிரானது. இந்த அசைவுகள் அதிகமாகவும் அவசியமில்லாமலும் இருந்தால் சில வேளை தொழுகை வீணாகிவிடுவதற்கும் அது காரணமாகிவிடும்.

# தொழுகை பற்றிய சில நபிமொழிகள்

*1. “என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ, அவ்வாறே நீங்கள் தொழுங்கள்.”[5] (ஸஹீஹுல் புகாரீ)*

*2. “உங்களில் ஒருவர் மஸ்ஜிதுக்குள் நுழைந்தால் உட்காருவதற்கு முன் இரண்டு ரக்அத்துகள் தொழட்டும்.” (இது ‘தஹிய்யத்துல் மஸ்ஜித்’ - ‘மஸ்ஜிதின் காணிக்கை’ என்று கூறப்படும்.) (ஸஹீஹுல் புகாரீ)*

*3. “கப்ருகள் மீது உட்காராதீர்கள்; அவற்றுக்கு அருகில் தொழாதீர்கள்.” (ஸஹீஹ் முஸ்லிம்)*

*4. “தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்டுவிட்டால் கடமையான தொழுகையைத் தவிர வேறு தொழுகையில்லை.”[6] (ஸஹீஹ் முஸ்லிம்)*

*5. “(தொழுகையில்) ஆடையைச் சேர்த்து வைத்துக் கொள்ளக் கூடாதென்று கட்டளையிடப்பட்டுள்ளேன்.” (ஸஹீஹ் முஸ்லிம்)*

---

*5. இந்நபிமொழி மாபெரும் கருத்தாழம் உடையது. இன்று பலர் தொழுகின்றனர். அவர்களிடம் ஆதாரமிக்க பல நபிமொழிகளைக் காண்பித்து இம்முறையில்தான் தொழவேண்டும் என்று கூறப்பட்டால், தங்களின் மத்ஹபில் எப்படிக் கூறப்பட்டுள்ளதோ அப்படித்தான் தொழுவோம் என்கின்றனர். நபிமொழியைப் பின்பற்றி மத்ஹபை விடுவதற்குப் பதிலாக, மத்ஹபைப் பின்பற்றி நபிமொழியை விட்டு விடுகின்றனர். மத்ஹபுக்காக தூதரின் கூற்றைப் புறக்கணிப்பவர்கள் பெரும் அபாயத்தில் இருக்கின்றனர்.*

*6. இன்று பலர் இந்நபிமொழிக்கு மாற்றம் செய்கின்றனர். குறிப்பாக, ஃபஜ்ர் தொழுகைக்குத் தாமதமாக வந்துவிட்டு இமாம் ஜமாஅத் ஆரம்பித்து விட்ட நிலையிலும் சுன்னத் தொழுகைக்கு தக்பீர் கட்டிவிடுகின்றனர். இது முற்றிலும் நபிவழிக்கு மாற்றமாகும். சுன்னத், நஃபில் தொழுகையில் இருந்தாலும் அந்தத் தொழுகையை விட்டுவிட்டு ஃபர்ள் உடைய ஜமாஅதில் கலந்துகொள்ள வேண்டும் என்று நபிமொழி கூறுகிறது. இதைக் கவனத்தில் வைக்க வேண்டும்.*

இந்த ஹதீஸ் மூலம் சட்டைக் கையை அல்லது வேறு பகுதி ஆடையைச் சுருட்டி வைத்துள்ள நிலையில் தொழுவது தடை செய்யப்பட்டுள்ளது என இமாம் நவவீ (ரஹ்) கூறியிருக்கிறார்கள்.

6. “நேராக நில்லுங்கள். ஒருவரோடு ஒருவர் ஒட்டி நில்லுங்கள்.” மற்றோர் அறிவிப்பில், “எங்களில் ஒருவர் தம் அருகில் நிற்பவரின் தோள்பட்டையோடு தம் தோள்பட்டையையும் அவரின் பாதத்தோடு தம் பாதத்தையும் ஒட்டி வைப்பார்” என்று நபித்தோழர் அனஸ் d கூறியதாக வந்துள்ளது.
(ஸஹீஹுல் புகாரீ)

7. “தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்டு விட்டால் அதற்காக ஓடி வராதீர்கள். நடந்தே வாருங்கள். அமைதியைக் கைக்கொள்ளுங்கள். எதை அடைந்து கொண்டீர்களோ அதைத் தொழுங்கள். எது உங்களுக்குத் தவறிவிட்டதோ அதைப் பின்பு முழுமைப்படுத்துங்கள்.”
(ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)

8. “ருகூவு செய்கின்ற நிலையில் நீ நிம்மதியடையும் வரை ருகூவு செய்! பின்பு நிலையில் நேராக நிற்கிறாய் என்கிற நிலையை அடைகின்ற வரை தலையை உயர்த்தி நில்! பின்பு சுஜூது செய்கின்ற நிலையில் நிம்மதியடையும் வரை சுஜூது செய்!” (ஸஹீஹுல் புகாரீ)

9. “சுஜூது செய்கின்ற போது உன் இரு உள்ளங்கைகளையும் கீழே வைத்து இரு முழங்கைகளையும் உயர்த்திக்கொள்!”
(ஸஹீஹ் முஸ்லிம்)

10. “நான் உங்களின் இமாம். எனவே, ருகூவிலும் சுஜூதிலும் என்னை முந்தாதீர்கள்.” (ஸஹீஹ் முஸ்லிம்)

11. “மறுமைநாளில் அடியான் முதலாவதாக கேள்வி கேட்கப்படுவது தொழுகையைப் பற்றித்தான். அது சரியாக இருந்தால் அவனுடைய மற்ற செயல்களும் சரியாகிவிடும். அது வீணாகிவிட்டால் அவனுடைய மற்ற செயல்களும் வீணாகிவிடும்.” (முஃஜமுத் தப்ரானீ, ழியா)

## ஜுமுஆ மற்றும் ஜமாஅத் தொழுகையின் முக்கியத்துவம்

ஜுமுஆ மற்றும் ஜமாஅத் தொழுகை கீழ்வரும் ஆதாரங்களின் அடிப்படையில் ஆண்கள் மீது கடமையாகும்.

1. அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

“அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்களே! ஜுமுஆ நாளில் தொழுகைக்காக அழைக்கப்பட்டால் அல்லாஹ்வை நினைவு கூர்வதின் பக்கம் விரைந்து செல்லுங்கள். வியாபாரத்தை விட்டுவிடுங்கள். நீங்கள் அறிந்தவர்களாயிருந்தால் அதுவே உங்களுக்குச் சிறந்ததாகும்.” (அல்குர்ஆன் 62:9)

2. நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்:

“எவரேனும் மூன்று ஜுமுஆக்களை அலட்சியமாக விட்டு விட்டால் அவருடைய இதயத்தில் அல்லாஹ் முத்திரை வைத்துவிடுவான்.”[7] (முஸ்னது அஹ்மது)

3. நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்:

“என் இளைஞர்களிடம் விறகுகளைச் சேகரிக்கும்படி கட்டளையிட்டு, தகுந்த காரணமின்றி தங்களுடைய

7. அதாவது, உள்ளத்திலுள்ள ஈமானிய ஒளி அணைந்து விடும். குஃப்ர் உடைய இருள் சூழ்ந்துகொள்ளும். நன்மைகளை அந்த உள்ளம் ஏற்காது. உள்ளம் இறையச்சம் இன்றி கடினமாகிவிடும்.

வீடுகளில் தொழக்கூடிய கூட்டத்தினரிடம் அவற்றைக் கொண்டுவந்து அவர்களோடு (சேர்த்து) அவர்களின் வீடுகளை எரித்துவிட வேண்டுமென்று நினைத்து விட்டேன்.'' (ஸஹீஹ் முஸ்லிம்)

4. நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்:

“எவர் தொழுகைக்கான அழைப்பைச் செவியேற்று அதற்கு வரவில்லையோ - இயலாமை என்கிற காரணம் இருந்தால் தவிர (அவர் வேறு இடத்தில் தொழுகின்ற) தொழுகைக்குப் பலனில்லை.” (சுனன் இப்னுமாஜா) (இயலாமை என்பது பயம் மற்றும் நோய் ஆகும்.)

5. அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடம் கண் பார்வையற்ற ஒரு மனிதர் வந்து, “அல்லாஹ்வின் தூதரே! என்னை மஸ்ஜிதுக்கு அழைத்து வருகின்ற வழிகாட்டி எவரும் எனக்கு இல்லை'' என்று கூறி (மஸ்ஜிதுக்கு வராமலிருக்க) அனுமதி கேட்டார். நபி ﷺ அவர்கள் அவருக்கு அனுமதியளித்தார்கள். அம்மனிதர் திரும்பிச் சென்ற போது அவரை அழைத்து “(தொழுகைக்கான) அழைப்பை (அதான் சொல்லப்படுவதை)நீ செவியேற்கிறாயா?” என்று கேட்டார்கள். அதற்கவர், “ஆம்!” என்றார். “அப்படியானால் நீ பதிலளி!” (கண்டிப்பாக மஸ்ஜிதுக்கு வா) என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

6. நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்:

“ஒருவர் (வெள்ளிக்கிழமை அன்று) குளித்துவிட்டு ஜுமுஆத் தொழுகைக்குச் சென்று, அவரது விதியில் எழுதப்பட்டிருந்த அளவு (கூடுதலாகத்) தொழுதார்; பிறகு இமாம் தமது சொற்பொழிவை (குத்பா) முடிக்கும்வரை வாய்மூடி மௌனமாக உரையைக் கேட்டுவிட்டு, அவருடன் சேர்ந்து

தொழுகையை நிறைவேற்றுகிறார். இத்தகையவருக்கு அந்த ஜுமுஆவிலிருந்து அடுத்த ஜுமுஆ வரையும் மேற்கொண்டு மூன்று நாட்கள் வரையும் ஏற்படுகின்ற (சிறு) பாவங்கள் (அனைத்தும்) மன்னிக்கப்படுகின்றன" (ஸஹீஹ் முஸ்லிம்)

## ஜுமுஆவை அதன் ஒழுங்கு முறைகளோடு தொழுவது எப்படி?

1. வெள்ளிக்கிழமை அன்று குளிக்க வேண்டும். நகங்களை வெட்டிக்கொள்ள வேண்டும். உளூ செய்தபின் சுத்தமான ஆடைகளை அணிந்து நறுமணம் பூசிக்கொள்ள வேண்டும்.

2. பூண்டையோ, பச்சை வெங்காயத்தையோ சாப்பிடக் கூடாது. புகை பிடிக்கக் கூடாது. பல் துலக்கும் குச்சியினாலோ, பற்பசையினாலோ வாயைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

3. மஸ்ஜிதில் நுழைந்ததும் கதீப் (இமாம்) மிம்பர் மீது இருந்து கொண்டிருந்தாலும் கூட அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் விதத்தில் இரண்டு ரக்அத்துகள் தொழ வேண்டும்.

நபி ﷺ அவர்கள் இப்படிக் கூறியுள்ளார்கள்: "உங்களில் ஒருவர் இமாம் உரையாற்றிக்கொண்டிருக்கும் போது ஜுமுஆவுக்கு வந்தால் இரண்டு ரக்அத்துகள் தொழட்டும். அவ்விரண்டையும் சுருக்கமாக தொழட்டும்."

(ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)

4. இமாமின் குத்பாவைச் செவியுறுவதற்காக எதுவும் பேசாமல் உட்கார்ந்திருக்க வேண்டும்.

5. ஜுமுஆவின் ஃபர்ளு இரண்டு ரக்அத்துகளை இமாமைப் பின்பற்றித் தொழவேண்டும்.

6. ஜுமுஆவின் பின்சுன்னத்தை (மஸ்ஜிதில்) நான்கு ரக்அத்துகளாகவும் அல்லது வீட்டில் இரண்டு ரக்அத்கள் மட்டும் தொழ வேண்டும். அதுவே (வீட்டில் தொழுவது) சிறப்பு.

7. ஜுமுஆ நாளில் நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத் கூறுவதை அதிகப்படுத்த வேண்டும்.

8. ஜுமுஆ நாளில் துஆவில் அதிக அக்கறையுடனும் கவனத்துடனும் ஈடுபட வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "நிச்சயமாக வெள்ளிக் கிழமையில் ஒரு நேரம் உள்ளது. ஒரு முஸ்லிம் அல்லாஹ்விடம் ஏதேனும் ஒரு நல்லதைக் கேட்பது அந்நேரத்தோடு ஒத்துப்போய்விட்டால் அல்லாஹ் அதனை அவருக்குக் கொடுக்காமல் இருப்பதில்லை."

(ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)

## பாடல் மற்றும் இசை பற்றிய சட்டம்

1. அல்லாஹுதஆலா கூறுகின்றான்:

"...மனிதர்களில் பலர் இருக்கின்றனர். அவர்கள் (பொய்யான கட்டுக்கதைகள், இசைகள், பாடல்கள் ஆகிய) வீணான விசயங்களை விலைக்கு வாங்கி (அவற்றை மக்களுக்கு எடுத்துக்கூறி) அல்லாஹ்வுடைய வழியில் இருந்து கல்வி அறிவின்றி மக்களை வழிகெடுத்து அதனை ஏளனமாகவும் எடுத்துக்கொள்கின்றனர். இத்தகையவர்களுக்கு இழிவு தருகின்ற வேதனை நிச்சயமாக உண்டு."

(அல்குர்ஆன் 31:6)

இந்த வசனத்தில் இடம் பெற்றுள்ள 'வீணான விசயங்கள்' என்ற வார்த்தையின் பொருள், 'பாடல்' என்று குர்ஆன் விரிவுரையாளர்களில் பெரும்பாலோர் கூறியுள்ளார்கள்.

இப்னு மஸ்ஊது d அவர்கள் அது பாடல்தான் என்று கூறியிருக்கிறார்கள். ஹசன் அல்பஸரீ (ரஹ்) அவர்கள் பாடல் மற்றும் இசைக்கருவிகள் பற்றித்தான் இந்த வசனம் இறங்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

2. ஷைத்தானை நோக்கி அல்லாஹுத ஆலா கூறுகிறான்: "மனிதர்களில் உன்னால் இயன்றவர்களை உன் குரல் மூலம் தூண்டிவிடு." (அல்குர்ஆன் 17:64)

(இங்கு "உன் குரல்" எனப்படுவது பாடலும் இசைக்கருவி களுமாகும்.)

3. நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்:

"என் சமுதாயத்தில் சில கூட்டத்தினர் தோன்றுவார்கள். விபசாரம், பட்டு, மது, இசை ஆகியவற்றை அவர்கள் ஹலாலாக (ஆகுமானதாக) ஆக்கிக்கொள்வார்கள்."
(ஸஹீஹுல் புகாரீ, சுனன் அபூதாவூது)

இந்த ஹதீஸின் பொருள்: முஸ்லிம்களில் சில கூட்டத்தினர் பிற்காலத்தில் வருவார்கள். அவர்கள் விபசாரம், பட்டு அணிதல், மது குடித்தல், இசை ஆகியவை தடுக்கப்பட்ட வையாக இருந்தும், அவற்றை ஆகுமானவை என்று கூறுவார்கள். இசை என்பது இராக ஒலியும் குதூகலமூட்டும் ஓசை எதற்கெல்லாம் உண்டோ அவையெல்லாமாகும். உதாரணமாக வீணை, புல்லாங்குழல், மேளம், கிதார், தஃப் மற்றுமுள்ளவை. "மணி ஷைத்தானின் ஓசைகள்" என்று நபி ﷺ அவர்கள் கூறி இருப்பதின் காரணமாக மணியும் கூட இதில் சேரும். (ஸஹீஹ் முஸ்லிம்)

இந்த ஹதீஸ், மணி அதன் சப்தத்தின் காரணமாகவே வெறுக்கப்படுகிறது என்பதை அறிவிக்கிறது. அதனைக் கால்நடைகளின் கழுத்துகளில் தொங்கவிட்டுக்

கொண்டிருந்தார்கள். அதனை வெறுப்பதற்கான காரணம், அதில் கிறித்துவர்கள் உபயோகிக்கிற ஆலயமணியின் தோற்றம் இருப்பதாகும். குயில் சப்தத்தை உபயோகிப் பதன் மூலம் மணியைத் தேவையற்றதாக்கிவிட முடியும். (அதாவது, அழைப்பு மணி போன்றவற்றில் குயிலின் சப்தம் ஒலிக்கின்ற கருவியைப் பயன்படுத்தலாம்.)

4. நீதி பரிபாலனம் பற்றிய நூலில் இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள் கூறியதாக எழுதப்பட்டுள்ளதாவது: “பாடல், வெறுக்கப்பட்ட வீண் செயலாகும்; அசத்தியத்துக்கு ஒப்பான தாகும். எவன் அதில் அதிகமாக ஈடுபடுகிறானோ, அவன் ஓர் அறிவிலியாவான். அவனுடைய சாட்சியம் மறுக்கப்படும். அதாவது, அவன் சாட்சியாக ஆகுவதற்குத் தகுதியற்றவன்.”

## தற்காலத்தில் உள்ள பாடல்கள்

இப்போது திருமண நிகழ்ச்சிகளிலும் விழாக்களிலும் ஒலிபரப்பப்படுகின்ற பெரும்பாலான பாடல்கள் காதல், ஆசை, முத்தம், சந்திப்பு, கன்னங்கள், அங்கங்களின் வர்ணனை மற்றும் பாலியல் தொடர்பான விசயங்கள் பற்றியே பேசுகின்றன. இவையெல்லாம் இளைஞர்களிடத்தில் தீய ஆசையைத் தூண்டிவிடுகின்றன. ஆபாசத்தையும் விபசாரத்தையும் அவர்களிடத்தில் ஊக்குவிக்கின்றன. நற்குணங்களை அழித்துவிடுகின்றன.

பாடலுடன் இசையும் இணைகின்ற போது அது மக்களின் பண்பாடுகளைக் கெடுத்துவிடுகிறது. திரைப் படங்களாலும் மக்களின் குணங்கள் கெடுக்கப்படுகின்றன. இளைஞர்களில் பலர் இசை மற்றும் திரைப்பட மோகத்தால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். அல்லாஹ்வை நேசிப்பதை விடுத்து, பாடகர்களையும் நடிகர்களையும் நேசிக்கிறார்கள்.

பாடல்களின் பாதிப்பு எந்த அளவுக்குச் சென்றுவிட்ட தென்றால் 1967இல் யூதர்களுடன் போர் நடந்த நேரத்தில் வானொலி ஒலிபரப்பாளர் முஸ்லிம் படைகளுக்குச் சொல்கிறார்: "முன்னேறிச் செல்லுங்கள்! உங்களோடு இன்ன பாடகரும் இன்ன பாடகியும் இருக்கிறார்கள்." ஆனால், அப்போரில் பாவிகளான யூதர்களுக்கு முன்னால் முஸ்லிம்களுக்கு மோசமான தோல்விதான் கிடைத்தது.

"முன்னேறி செல்லுங்கள்! தன் உதவி மூலம் அல்லாஹ் உங்களுடன் இருக்கிறான்" என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும்.

மேலும் ஒரு பாடகி, கெய்ரோவில் நடத்தப்படுகின்ற தனது மாதாந்திரக் கச்சேரி நிகழ்ச்சியை 1967ஆம் ஆண்டு யூதர்களுடன் போர் நடப்பதற்கு முன், நாம் வெற்றி பெற்றால் அந்நிகழ்ச்சியை டெல் அபீபில் நடத்துவதாக அறிவித்தாள்.

ஆனால், போருக்குப்பின் யூதர்கள் ஜெருசலத்தில் ஹாயித்துல் முப்கீ (அழும் சுவர்) மீது நின்றுகொண்டு அல்லாஹ் தங்களுக்கு உதவி செய்ததற்காக நன்றி செலுத்திக் கொண்டிருந்தார்கள். (அதாவது, முஸ்லிம்கள் யூதர்கள் வசமிருந்த டெல் அபீபைக் கைப்பற்ற முடியாமல் போனது மட்டுமின்றி தங்கள் வசமிருந்த புனித நகரம் ஜெருசலத்தை யும் இழந்து இழிவடைந்தார்கள்.)[8]

8. இன்று நாம் வசிக்கின்ற இந்தியாவிலும் நிலைமை இதைவிட மோசமாக உள்ளது. சினிமா நடிகர்கள், நடிகைகள் மீதுதான் மக்கள் பித்து பிடித்து அலைகின்றனர். அவர்களைத்தான் வாழ்க்கைக்கு முன்னோடிகளாக எடுத்துக்கொள்கின்றனர். அவர்கள் எதைச் செய்கிறார்களோ அதுதான் அழகாகவும் உயர்வாகவும் மக்களுக்குத்தோன்றுகிறது. நடை, உடை, பாவனை, பேச்சு, உணவு உண்பது என அனைத்திலும் அவர்களுக்கே அடிமைகளாக இருக்கின்றனர். அவர்களின் வாழ்க்கை வரலாறுகள்தான்

மார்க்கப் பாடல்களும் கூட தவறுகளிலிருந்து விலகியிருக்க வில்லை. அத்தகைய பாடல் ஒன்று சொல்வதைக் கேள்.

"ஒவ்வொரு நபியும் தமது இடத்தில் இருக்கையில், முஹம்மதே!

இதோ அர்ஷ்! அதைப் பெற்றுக்கொள்" என்று கூறப் பட்டுள்ளது.

இந்த இறுதி வாக்கியம் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய

---

*மக்களின் அன்றாட சர்ச்சைகளாக உள்ளன. அவர்களின் மகிழ்ச்சி மக்களின் மகிழ்ச்சியாகவும், அவர்களின் துக்கம் மக்களின் துக்கமாகவும் உள்ளது. பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் அவர்களைத்தான் மையப்படுத்தி நிகழ்ச்சிகளை நடத்துகின்றன.*

*எந்த வகையான விளம்பரங்களாக இருந்தாலும் நடிகர், நடிகை இன்றி காண்பிக்கப்படுவதில்லை. ஆடல், பாடல், இசை இவைதான் வாழ்க்கை என்றாகிவிட்டது. இதனால் மக்களுக்குக் கிடைத்த நன்மை என்ன? விபசாரம் பெருகியது, கள்ளத்தொடர்பு சகஜமானது, காதல் என்ற பெயரில் ஆண்களும் பெண்களும் உல்லாசமாகத் திரிவது, ஓடிப் போவது, பிறகு தோல்வி என்ற பெயரில் தற்கொலை செய்து கொள்வது, தந்தை பெயர் தெரியாத குழந்தைகள் உருவாகுவது.*

*கோயில்களும் சர்ச்சுகளும் கூட காமக்களியாட்டங்களின் மையங்களாக மாறிவருகின்றன. ஒரு பெண்ணைப் பலர் அனுபவிக்கின்ற போட்டியில் கொலைகள் பல நிகழ்வது இயல்பாகி வருகின்றது. பள்ளியில் படிக்கின்ற இளம் பெண்கள் கயவர்களால் கடத்திக் கற்பழிக்கப்பட்டு கொல்லப் படுகிறார்கள். உறவினர்களின் பாலியல் விளையாட்டில் சிக்கி மானத்தை இழக்கின்ற அப்பாவிக் கன்னியர்களின் கதைகள் இரசிக்கப்படுகின்றன.*

*கேவலம்! கேவலம்!! கேவலம்!!! இறைவனுடைய நேர்வழியை இழந்த வீணர்களின் மதங்களும் கொள்கைகளும் வேண்டுமானால் இந்த அசிங்கங்களையும் அவலங்களையும் அங்கீகரிக்கலாம். அவர்கள் அவற்றை இரசிக்கலாம். ஆனால், முஸ்லிம்கள்??? அல்லாஹ்வின் நேரிய வழிகாட்டலைப் பெற்றவர்கள். ஒழுக்கத்தைக் கட்டிக்காக்கக் கடமைப்பட்டவர்கள். இவர்களும் இந்த வீணர்களின் பாதையில் செல்கிறார்களே!! அந்தோ பரிதாபம்! இந்தச் சமுதாயத்திற்காக அழுவோர் இல்லையா? அல்லாஹ்வே போதுமானவன்.*

தூதர் மீதும் பொய்யாகக் கூறப்பட்டுள்ளது; இது உண்மைக்கு முரணானது.[9]

## பாடல் மற்றும் இசைக்கான நிவாரணம்

1. வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் அவற்றைக் கேட்பதிலிருந்து விலகியிருப்பது. குறிப்பாக, கெட்ட பாடல்கள் மற்றும் இசையுடன் சேர்ந்த பாடல்கள் ஆகியவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

2. பாடலையும் இசையையும் எதிர்கொண்டு முறியடிப்பதில் மிகப் பெரியது அல்லாஹ்வை திக்ரு செய்வதும் குர்ஆன் ஓதுவதுமாகும். குறிப்பாக, சூரா பகறாவை ஓதுவது ஏற்ற மாகும். நபி ﷺ கீழ்க்கண்டவாறு கூறியிருக்கின்றார்கள்:

“நிச்சயமாக எந்த வீட்டில் சூரா பகறா ஓதப்படுகிறதோ அந்த வீட்டிலிருந்து ஷைத்தான் விரண்டோடுகிறான்.”
(ஸஹீஹ் முஸ்லிம்)

அல்லாஹுதஆலா கூறுகின்றான்:

---

9. மார்க்கப் பாடல்களைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும். மார்க்கப் பாடல்கள் அனுமதிக்கப்படுவதற்குச் சில நிபந்தனைகள் உள்ளன. 1. இசை இருக்கக் கூடாது. 2. இச்சை ஊட்டுகின்ற இராகம் இருக்கக் கூடாது. 3. அல்லாஹ்வைப் பற்றிய உண்மையான புகழ்ச்சி இருக்க வேண்டும். 4. அல்லது அவனுடைய தூதர் ﷺ அவர்களின் உண்மையான சிறப்புகள், தகுதிகள் பற்றி கூறப்பட்டிருக்க வேண்டும். 5. அல்லது மார்க்க விசயங்களைப் பின்பற்ற ஆர்வமூட்டி உண்மையான அறிவுரைகள் கூறப் பட்டிருக்க வேண்டும். இவற்றைத் தவிர்த்துள்ள பாடல்கள் வழிகேடுதான். இன்று நாகூர் ஹனீஃபா, **E. M.** யூசுஃப் இன்னும் இவர்கள் போன்றவர்கள் பாடுகின்ற பாடல்களில் இணைவைக்கின்ற வாசகங்கள் பல இருக் கின்றன. இசையும் கலந்துள்ளது. கற்பனைக் கதைகளே இவற்றின் அடிப்படையாக அமைந்துள்ளன. எனவே, முஸ்லிம்கள் இவற்றை அவசியம் தவிர்த்தே ஆகவேண்டும்.

"மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து அறிவுரையும், நெஞ்சங்களில் உள்ளவற்றிற்கு மருந்தும் வழிகாட்டியும் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்களுக்கு அருளும் உங்களிடம் வந்திருக்கின்றன." (அல்குர்ஆன் 10:57)

3. நபி ﷺ அவர்களின் வரலாறு, நபித்தோழர்கள் வரலாறு ஆகியவற்றைப் படிக்க வேண்டும்.

## அனுமதிக்கப்பட்ட பாடல்

1. பெருநாளில் பாடுவது அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆயிஷா g அவர்கள் அறிவிக்கின்ற கீழ்க்கண்ட நபிமொழி அதற்கு ஆதாரமாக உள்ளது.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் ஆயிஷா g அவர் களிடம் இரண்டு சிறுமிகள் தஃப் அடித்துக் கொண்டிருந்த நிலையில் வந்தார்கள். (மற்றோர் அறிவிப்பில், "என்னிடம் இரண்டு சிறுமிகள் பாட்டுப் பாடிக்கொண்டிருந்த நிலையில்" என்று ஆயிஷா g அவர்கள் கூறுகிறார்கள்.) அவ்விரு சிறுமிகளையும் அபூபக்ர் d அவர்கள் விரட்டி னார்கள். அப்போது நபி ﷺ அவர்கள், "அவர்களை விட்டுவிடுங்கள். ஏனெனில், ஒவ்வொரு கூட்டத்திற்கும் பெருநாள் இருக்கிறது. நம்முடைய பெருநாள் இன்றைய நாளாகும்" என்று அபூபக்ர் d அவர்களிடம் கூறினார்கள்.

2. திருமணத்தை அறிவிக்கவும் அதனை ஆர்வமூட்டவும் திருமணத்தின் போது 'தஃப்' அடித்துப் பாட்டுப் பாடுவது கூடும். அதற்கான ஆதாரம் கீழ்வரும் நபிமொழியாகும்.

"ஹலாலுக்கும் ஹராமுக்குமிடையில் பிரித்தறிவிப்பது திருமணத்தில் 'தஃப்' அடிப்பதும் சப்தமுமாகும்." (இந்த அனுமதி சிறுமிகளுக்கு மட்டும்தான்.) (முஸ்னது அஹ்மது)

3. சுறுசுறுப்பாகச் செயல்படுவதற்கு உதவக்கூடிய இஸ்லாமியப் பாடலை வேலை சமயத்தில் பாடுவது கூடும். குறிப்பாக, அதில் பிரார்த்தனை அடங்கியிருக்குமானால் இன்னும் விசேஷமானது.

இப்னு ரவாஹாவின் கவிதையை அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் பாடிக்காட்டுவார்கள். (அகழ்ப்போருக்கு முன்) அகழ் தோண்டுவதில் ஈடுபட்டிருந்தவர்களைக் கீழ்வரும் கவிதையைக் கூறி ஆர்வமூட்டிக் கொண்டிருந்தார்கள்.

“அல்லாஹ்வே! மறுமை வாழ்வைத்தவிர வேறு வாழ்வில்லை.

எனவே, அன்ஸாரிகளையும் முஹாஜிர்களையும் நீ மன்னித்தருள்!”

அப்போது அன்ஸாரிகளும் முஹாஜிர்களும் கீழ்வருமாறு (கவிதை நடையில்) பதில் கூறினார்கள்:

“நாங்கள் முஹம்மதிடம் உடன்படிக்கை செய்தவர்கள். வாழும் காலமெல்லாம் போர் செய்வோம்!”

மேலும், இப்னு ரவாஹாவின் மற்றொரு கவிதையைப் பாடிக்கொண்டு நபி ﷺ அவர்கள் தம் தோழர்களுடன் (அகழ்ப்போருக்காக) மண்ணைத் தோண்டிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கவிதை வருமாறு:

“அல்லாஹ்வின் மீது ஆணையாக!

அல்லாஹ் இல்லையென்றால் நேர்வழி நடந்திருக்க மாட்டோம்.

நோன்பிருந்திருக்கவும் மாட்டோம்.

தொழுதிருக்கவும் மாட்டோம்!

*(இறைவா!) எங்கள் மீது*

*அமைதியை இறக்கியருள்!*

*(எதிரிகளை) நாங்கள் சந்தித்தால்,*

*பாதங்களை உறுதிப்படுத்து!*

*இணைவைப்பாளர்கள் எம் மீது*

*அத்துமீறிவிட்டார்கள்.*

*அவர்கள் தீமையை நாடினால்*

*நாங்கள் எதிர்ப்போம்! நாங்கள் எதிர்ப்போம்!! எதிர்ப்போம்!!!"*

*என்று தமது சப்தத்தை உயர்த்திக் கூறினார்கள்.*

*(ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)*

*4. ஈமான் அல்லது அல்லாஹ்வின் தூதருடைய அன்பு மற்றும் அவர்களின் பண்புகளைக் கூறுதல். அல்லது போரையும் கொள்கை உறுதியையும் நற்குணங்களை வலுப்படுத்துவதையும் தூண்டுதல். அல்லது, முஸ்லிம்களுக்கு மத்தியில் அன்போடு இருக்கவும் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளவும் அழைத்தல். அல்லது, இஸ்லாமின் சிறப்பம்சங்களையும் அதன் அடிப்படைகளையும் கூறுதல். இப்படி மக்களுக்கு மார்க்கத்திலும் நற்குணங்களிலும் பலன் தரக்கூடிய பாடலைப் பாடுவது அனுமதிக்கப்பட்டதாகும்.*

*5. இசைக்கருவிகளில் 'தஃப்' மட்டும் பெருநாள் மற்றும் திருமணம் ஆகியவற்றில் பெண்களுக்கு அனுமதிக்கப்படும். அதனை அல்லாஹ்வை திக்ரு செய்கின்ற போது அறவே உபயோகிக்கக் கூடாது. ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களும் அதேபோல் அவர்களுக்குப்பின் நபித் தோழர்களும் அதனை உபயோகிக்கவில்லை. ஆனால்,*

ஸூஃபியாக்கள் தங்களுக்கென அதனை ஆகுமாக்கிக் கொண்டார்கள். மேலும், 'தஃப்' அடிப்பதை திக்ரில் சுன்னத்தாக ஆக்கிக்கொண்டார்கள். அதுவோ 'பித்அத்' ஆகும். அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறுகிறார்கள்:

"புதிதாக உருவாக்கப்படுகிற செயல்கள் பற்றி உங்களை எச்சரிக்கிறேன். புதிதாக உருவாக்கப்படுகிற ஒவ்வொன்றும் 'பித்அத்' ஆகும். ஒவ்வொரு 'பித்அத்'தும் வழிகேடாகும்." (ஜாமிவுத் திர்மிதீ)

## உருவப்படங்கள் மற்றும் சிலைகள் பற்றிய சட்டம்

1. அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும்; சிலைகளிலும் உருவப்படங்களிலும் உள்ள இறைநேசர்கள் மற்றும் நல்லடியார்களை வணங்குவதை விட்டுவிட வேண்டும் என்பதின் பக்கம் மக்கள் அனைவரையும் அழைப்பதுதான் இஸ்லாமின் அடிப்படையாகும்.

இந்த அழைப்பு மக்களை நல்வழிப்படுத்துவதற்காக அல்லாஹுதஆலா தூதர்களை அனுப்பிய ஆரம்பக் காலத்திலிருந்தே உள்ள பழமையான அழைப்பாகும். அல்லாஹுத ஆலா கூறுகின்றான்:

"அல்லாஹ்வை வணங்குங்கள்; 'தாகூத்'தை விட்டு விலகிக்கொள்ளுங்கள் என்று அழைக்கின்ற தூதரை ஒவ்வொரு சமுதாயத்திலும் நிச்சயமாக நாம் அனுப்பி யிருக்கிறோம்."[10] (அல்குர்ஆன் 16:36)

உங்களுக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் "நிச்சயமாக என்னைத் தவிர வேறு இறைவனில்லை;

10. அல்லாஹ்வைத் தவிர்த்து தன் விருப்பத்துடன் வணங்கப்படுகின்ற ஒவ்வொன்றும் 'தாகூத்' ஆகும்.

என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹ்யி அறிவிக்காமலில்லை. (அல்குர்ஆன் 21:25)

இத்தகைய சிலைகள் பற்றிய கூற்று திருகுர்ஆனில் சூரா நூஹ் அத்தியாயத்தில் வந்துள்ளது.

இந்தச் சிலைகள் நல்ல மனிதர்களின் உருவங்களாக இருந்தன என்பதற்கு மிகப் பெரிய ஆதாரம், கீழ்வரும் வசனத்தின் விளக்கத்தை இப்னு அப்பாஸ் d அவர்கள் மூலமாக இமாம் புகாரீ (ரஹ்) அறிவிக்கின்ற செய்தியில் உள்ளது.

"நீங்கள் உங்கள் தெய்வங்களை விட்டுவிடாதீர்கள். மேலும் 'வத்', சுவாஉ', 'யகூஸ்', 'யஊக்', 'நஸ்ர்' (ஆகிய சிலை)களையும் விட்டுவிடாதீர்கள் என்று கூறினார்கள். நிச்சயமாக பலரை அவர்கள் வழிகெடுத்து விட்டார்கள்."

(அல்குர்ஆன் 71:23, 24)

இந்த வசனத்துக்கு விளக்கமாக இப்னு அப்பாஸ் d கூறுகிறார்கள்:

இவை நூஹ் a அவர்களின் கூட்டத்திலிருந்த நல்ல மனிதர்களின் பெயர்களாகும். அவர்களெல்லாம் மரணித்த பிறகு ஷைத்தான் அவர்களின் கூட்டத்தினரிடம் வந்து, "அவர்களெல்லாம் (வாழ்ந்த காலத்தில்) அமர்ந்து கொண்டிருந்த சபைகளில் சிலைகளை நாட்டுங்கள்! அவற்றிற்கு அவர்களின் பெயர்களைச் சூட்டுங்கள்" என்று தெரிவித்தான். அவர்களும் அப்படியே செய்தார்கள். ஆனால், அவை வணங்கப்படவில்லை. அந்தக் கூட்டத்தினர் மரணித்து, அவர்களைப் பற்றிய வரலாறும் அறியப்படாமல் ஆனபோது அவை வணங்கப்பட்டன.

இந்த வரலாற்று நிகழ்வு மூலம், அல்லாஹ் அல்லாதவர் வணங்கப்படுவதற்கான காரணம் பெரியார்களின் தோற்றம் கொண்டுள்ள சிலைகளும் உருவப்படங்களும்தான் என்பதை நாம் அறிய முடிகிறது.

இக்காலத்தில் படங்களையும் சிலைகளையும் வணங்குப வர்கள் இல்லாத காரணத்தால் இந்தச் சிலைகள் குறிப்பாக, படங்கள் ஹலாலாக (அனுமதிக்கப்பட்டதாக) ஆகிவிட்டது என்று மக்களில் பலர் கருதுகிறார்கள். இக்கருத்து பலவிதங்களில் நிராகரிக்கப்பட வேண்டியதாகும்.[11]

படங்களும் சிலைகளும் இக்காலத்திலும் வணங்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. சர்ச்சுகளில் ஈசா a மற்றும் அவர்களின் தாயார் மர்யம் a ஆகியோரின் படங்கள் வணங்கப்படுகின்றன. கிறிஸ்துவர்கள் சிலுவை யையும் கூட குனிந்து வணங்குகிறார்கள்!

மேலும், ஈசா மற்றும் மர்யம் a அவர்களின் ஓவியப் பலகைகள் மிக உயர்ந்த விலைக்கு விற்கப்படுகின்றன. அவற்றை வணங்குவதற்காகவும் கண்ணியப்படுத்துவதற் காகவும் வீடுகளில் தொங்கவிடப்படுகின்றன.

2. பொருளாதாரத்தில் முன்னேறிய, இறை அறிவில் பின்தங்கியுள்ள நாடுகளில் உள்ள பெரியவர்களின் சிலைகள் அருகில் நடந்து சென்றால் மரியாதை செய்யும் விதமாக தொப்பியைக் கழற்றுகின்றனர்; குனிகின்றனர். அமெரிக்காவில் ஜார்ஜ் வாஷிங்டன் சிலை, ஃபிரான்ஸில் நெப்போலியன் சிலை, இரஷ்யாவில் லெனின் மற்றும்

---

11. ஆசிரியர் அவர்கள் இஸ்லாமிய நாட்டைக் கவனித்து இக்கருத்தைக் கூறியுள்ளார்கள். ஏனைய நாடுகளின் நிலையைப் பற்றி அடுத்த பத்திகளில் குறிப்பிடுகிறார்கள்.

ஸ்டாலின் சிலைகள்,[12] மேலும் இவையல்லாமல் சாலைகளில் வைக்கப்பட்டுள்ள சிலைகளைக் கடந்து செல்பவர்கள் அவற்றுக்குக் குனிந்து மரியாதை செய்வது இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். சிலைகள் பற்றிய சிந்தனை சில அரபு நாடுகளுக்கும் ஏற்பட்டுவிட்டது. அல்லாஹ்வை நிராகரித்தவர்களை கண்மூடித்தனமாகப் பின்பற்றி தங்களின் சாலைகளில் சிலைகளை நிறுத்தியிருக்கிறார்கள். அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளிலும் சிலைகள் நிறுவப்படுவது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதற்குச் செலவாகின்ற பணத்தை மஸ்ஜிதுகள், பள்ளிக் கூடங்கள், மருத்துவமனைகள், அறப்பணி மன்றங்கள் கட்டுவதில் செலவழிப்பது அவசியமாகும். இவை சமுதாயத்திற்கு நல்ல பலனைத் தரக்கூடியவை ஆகும். இவற்றிற்கு பெரிய மனிதர்களின் பெயர்களைச் சூட்டுவதில் தவறில்லை.

3. நிச்சயமாக இந்தச் சிலைகள், சிறிது காலத்திற்குப் பின்னர் அவற்றுக்காகத் தலைசாய்த்து மரியாதை செய்யப்படும், கண்ணியப்படுத்தப்பட்டு வணங்கப்படும். ஐரோப்பா, துருக்கி மற்றுமுள்ள நாடுகளில் இவ்வாறுதான் ஏற்பட்டது.

தங்களின் பெரியவர்களுக்குச் சிலை நாட்டி, பின்பு அவர்களைக் கண்ணியப்படுத்தி வணங்கிய முறையில் நூஹ் a அவர்களின் கூட்டத்தினர் இவர்களை முந்திக் கொண்டுவிட்டார்கள். அவ்வளவுதான்![13]

---

12. இத்துடன், இந்தியாவிலுள்ள காந்தி, நேரு, அம்பேத்கார் போன்றோரின் சிலைகளுக்கு மரியாதை செய்யப்படுவதையும் குறிப்பிடலாம்.

13. உருவப்படங்களும் உருவச்சிலைகளும் வணங்கப்படுவது குறித்து இந்தியாவில் வசிப்பவர்கள் நன்கு அறிந்தவர்களே!

4. “எந்தச் சிலையையும் அழிக்காமல் விடாதே! மேலும், உயரமான எந்த கப்ரையும் (மற்ற பொதுக் கப்ருகளுடன்) சமப்படுத்தாமல் விடாதே” என்று கூறி அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் அலீ இப்னு அபீதாலிபு d அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

மற்றோர் அறிவிப்பில், “எந்த உருவப்படத்தையும் அழிக்காமல் விடாதே!” என்ற வார்த்தையும் இடம் பெற்றுள்ளது. (முஸ்னது அஹ்மது)

## அனுமதிக்கப்பட்ட படங்களும் உருவங்களும்

1. மரம், நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன், மலைகள், பாறை, கடல், ஆறு, கஅபா, மதீனா, மஸ்ஜிதுல் அக்ஸா மற்றும் மஸ்ஜிதுகள் போன்றவற்றின் படங்கள் அனுமதிக்கப்படும். இவற்றில் மனிதன் அல்லது மிருகத்தின் உருவம் இருக்கக் கூடாது.

இதற்கான ஆதாரம், இப்னு அப்பாஸ் d அவர்கள் “நீ அவசியம் இதைத்தான் செய்தாக வேண்டும் என்றிருந்தால் மரம் மற்றும் எதற்கு உயிர் இல்லையோ அதனைச் செய்து கொள்” என்று (ஓர் ஓவியருக்குக்) கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரீ)

2. அடையாள அட்டை பாஸ்போர்ட், ஓட்டுநர் அடையாள அட்டை மற்றும் அவசியமான வேறு சிலவற்றில் பதிக்கப்பட்டுள்ள படங்கள் நிர்ப்பந்தத்தை முன்னிட்டு அனுமதிக்கப்பட்டவையாகும்.

3. கொலைகாரர்கள், திருடர்கள் மற்றும் குற்றவாளிகளின் படங்கள் அவர்களைக் கண்டுபிடித்து, கைது செய்து தண்டிப்பதற்காக அனுமதிக்கப்படுகிறது. இதேபோல்

மருத்துவம் போன்ற கல்விகளின் தேவைகளுக்காகவும் அனுமதிக்கப்படும்.

4. சிறு குழந்தையின் வடிவில் துணியால் வீட்டில் செய்யப்படக்கூடிய பொம்மை சிறுமிகள் விளையாடுவதற்காக அனுமதிக்கப்படும். சிறுமி அப்பொம்மைக்கு உடையணிவித்து அதைச் சுத்தம் செய்து தூங்க வைத்து விளையாடுவாள். அது பின்பு, அவள் தாயாக ஆகும் போது பிள்ளைகள் வளர்ப்பதை கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஆகும். இதற்கான ஆதாரம் ஆயிஷா ‎ؓ அவர்களின் கீழ்வரும் கூற்றாகும்.

“நான் நபி ﷺ அவர்களிடத்தில் பொம்மைகள் வைத்து விளையாடிக் கொண்டிருந்தேன்.” (ஸஹீஹுல் புகாரீ)

குழந்தைகளுக்கு அந்நியக் கலாசார பொம்மைகளை வாங்கிக் கொடுப்பது கூடாது. குறிப்பாக, உடை குறைந்த உடல் வெளியில் தெரிகின்ற பொம்மைகளை வாங்கக் கூடாது. குழந்தை அதனிடமிருந்து அந்த முறையைக் கற்றுக் கொண்டு அப்படியே பின்பற்றும். அதன் மூலம் சமுதாயம் கெட்டுப்போகும். இத்துடன் அந்நிய நாடுகளுக்கு நம் செல்வத்தைச் செலவழித்த குற்றமும் சேரும்.

## புகைப்பிடித்தல் ஹராம்

புகை பிடிக்கின்ற பழக்கம் நபி ﷺ அவர்களின் காலத்தில் இருக்கவில்லை. ஆனால், உடலுக்குக் தீங்கு விளைவிக்கக்கூடியவை, அருகிலிருப்பவருக்கு தொந்தரவு தரக்கூடியவை, செல்வத்தை அழிக்கக்கூடியவை ஆகிய இவை அனைத்தையும் தடைசெய்யக்கூடிய சட்டங்களை இஸ்லாம் கொண்டு வந்திருக்கிறது. இதோ! புகைப்பது கூடாது என்ற சட்டம் பற்றி வருகின்ற பொதுவான ஆதாரங்கள்:

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

“அவர் அவர்களுக்கு நல்லவற்றை ஆகுமாக்குகிறார். மேலும், அருவருப்பானவற்றை அவர்கள் மீது தடை செய்கிறார்.” (அல்குர்ஆன் 7:157)

புகை தீங்கு செய்யக்கூடிய அருவருப்பானவற்றைச் சேர்ந்தது. வெறுக்கத்தக்க வாடையைக் கொண்டது.

2. “உங்கள் கரங்களை நீங்கள் அழிவில் போடாதீர்கள்.” (அல்குர்ஆன் 2:195)

புகை பிடிப்பது புற்றுநோய், காசநோய் போன்ற அழிவுக்குள் ளாக்கும் நோய்களில் வீழ்த்திவிடும்.

3. “உங்கள் உயிர்களை நீங்களே கொல்லாதீர்கள்.” (அல்குர்ஆன் 4:29)

புகை பிடிப்பது தாமதமான தற்கொலையாகும்.

4. மது, சூதுவின் தீங்கு பற்றி, அவை இரண்டின் பாவம் அவற்றின் பலனைவிட மிகப் பெரியது (அல்குர்ஆன் 2:219) என்று அல்லாஹு தஆலா கூறுகின்றான்.

புகை பிடிப்பது முழுவதுமே தீங்குதான்.

5. “வீண் விரயம் செய்யாதே! நிச்சயமாக வீண்விரயம் செய்பவர்கள் ஷைத்தானின் சகோதரர்களாக இருக்கி றார்கள்.” (அல்குர்ஆன்17:26, 27)

புகை பிடிப்பதும் வீண் விரயமாகும். இது ஷைத்தானின் செயலாகும்.

6. “தனக்குத்தானே இடையூறு செய்வதும் ஆகாது; பிறருக்கு இடையூறு செய்வதும் ஆகாது” என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (முஸ்னது அஹ்மது)

புகைப்பழக்கம், புகைப்பவருக்குத் தீங்கு செய்வதோடு அவருக்கு அருகிலுள்ளவருக்கும் நோயை ஏற்படுத்துகிறது. புகைப்பவரின் செல்வத்தை அழிக்கிறது.

7. “செல்வத்தை வீணாக்குவதை உங்களிடம் அல்லாஹ் வெறுக்கிறான்” என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.
(ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)

புகைப்பழக்கம் செல்வத்தை வீணாக்கி விடுகிறது.

## தாடியை நீளமாக வைப்பது அவசியம்

1. ஷைத்தான் சொன்னதாக அல்லாஹு தஆலா கூறிக் காட்டுகிறான்:

“அவர்களை நான் ஏவுவேன்; அவர்கள் அல்லாஹ்வின் படைப்பை மாற்றுவார்கள்.” (அல்குர்ஆன் 4:119)

தாடியை சிரைப்பதும், அல்லாஹ்வின் படைப்பை மாற்றுவதும் ஷைத்தானுக்குக் கட்டுப்படுவதுமாகும்.

2. “அல்லாஹ்வின் தூதர் உங்களிடம் எதனைக் கொண்டு வந்தாரோ அதனை எடுத்துக்கொள்ளுங்கள். எதனை விட்டும் உங்களைத் தடுத்தாரோ அதனை விட்டு விலகிக் கொள்ளுங்கள்.” (அல்குர்ஆன் 59:7)

அல்லாஹ்வின் தூதர் ﷺ தாடியை வளர்க்கும்படி கட்டளையிட்டு அதனை மழிப்பதற்குத் தடையும் விதித் திருக்கிறார்கள்.

3. “மீசையைக் கத்தரித்துக் கொள்ளுங்கள்; தாடியை நீளமாக்குங்கள்; மஜூஸிகளுக்கு மாறு செய்யுங்கள்” என்று நபி ﷺ அவர்கள் கூறியிருக்கிறார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

அதாவது, “மீசை உதட்டின் மீது விழுவதைக் கத்தரித்துக்

கொள்ளுங்கள். அல்லாஹ்வை நிராகரித்தவர்களுக்கு மாறுசெய்கின்ற விதத்தில் தாடியை விட்டுவிடுங்கள்'' என்பது பொருளாகும்.

4. பத்துச் செயல்கள் இயற்கையான வழிமுறையில் உள்ளவை.

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

''பத்து விசயங்கள் இயற்கை மரபுகளில் அடங்கும். (அவையாவன:) மீசையைக் கத்தரிப்பது, தாடியை வளர்ப்பது, பல் துலக்குவது, நாசிக்கு நீர் செலுத்துவது, நகங்களை வெட்டுவது, விரல் கணுக்களைக் கழுவுவது, அக்குள் முடிகளை அகற்றுவது, மர்ம உறுப்பின் முடிகளை மழிப்பது, (மல ஜலம் கழித்த பின்) தண்ணீரால் துப்புரவு செய்வது.'' இதை ஆயிஷா g அறிவிக்கிறார்கள்.

(இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான) ஸகரிய்யா இப்னு அபீஸாயிதா (ரஹ்) கூறுகின்றார்கள்: (இந்த ஹதீஸை எனக்கு அறிவித்த) முஸ்அப் இப்னு ஷைபா (ரஹ்) அவர்கள், "பத்தாவது விசயத்தை நான் மறந்துவிட்டேன். அது வாய் கொப்பளிப்பதாய் இருக்கலாம்" என்று கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

தாடியை நீளமாக வளர்ப்பது அல்லாஹ்வின் (மாற்றத்தகாத) இயற்கை நெறியைச் சேர்ந்தது. அதனைச் சவரம் செய்வதும் குறைத்துக்கொள்வதும் கூடாது.

5. "பெண்களுக்கு ஒப்பாக நடக்கின்ற ஆண்களை அல்லாஹ் வின் தூதர் ﷺ அவர்கள் சபித்தார்கள்."

(ஸஹீஹுல் புகாரீ)

தாடியை மழிப்பது பெண்களுக்கு ஒப்பாவதாகும். அல்லாஹ் வின் அருளிலிருந்து விரட்டப்படுவதற்குக் காரணமாகும்.

6. “ஆனால் என் இறைவன் நான் தாடியை நீளமாக வைத்திருக்க வேண்டுமென்றும் என் மீசையை கத்தரித்துக்கொள்ள வேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கிறான்” என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (தபரீ)

தாடியை நீளமாக வளர்ப்பது அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் கட்டளை. ஆகவே, அது வாஜிப் - கட்டாயம் ஆகும்.

## பெற்றோருக்கு நன்மை புரிதல்

இவ்வுலகிலும் மறுமையிலும் நீ வெற்றிபெற நாடினால் கீழ்வரும் அறிவுரைகளைச் செயல்படுத்து:

- உன் பெற்றோரிடம் ஒழுக்கத்துடன் உரையாடு. ‘சீ’ என்கிற வார்த்தையைக்கூட அவர்களிடம் கூறாதே! அவர்களை விரட்டாதே! அவர்களிடம் கண்ணியமாக, மரியாதையாகப் பேசு!
- பாவமான செயல் அல்லாதவற்றில் எப்போதும் பெற்றோருக்குக் கட்டுப்படு! ஏனெனில், படைத்தவனுக்கு மாறுசெய்கின்ற செயலில் படைக்கப்பட்டவருக்குக் கட்டுப்படுவது கூடாது.
- பெற்றோரிடம் மென்மையாக நடந்துகொள்! அவர்களின் முகத்திற்கு எதிராகக் கடுகடுக்காதே! கோபத்துடன் அவர்களை முறைத்துப் பார்க்காதே!
- உன் பெற்றோரின் நற்பெயரையும் அவர்களின் சிறப்பையும் அவர்களின் பொருளையும் பாதுகாத்துக் கொள். அவர்களின் அனுமதியின்றி அவர்களின் பொருள் எதையும் எடுக்காதே!

- அவர்கள் கட்டளை இடாவிட்டாலும் அவர்களை மகிழ்ச்சிப்படுத்தக் கூடியதைச் செய்! அவர்களுக்குப் பணிவிடை செய்வது, அத்தியாவசியமானவற்றை வாங்கித் தருவது, உயர்கல்வி கற்று நற்பெயர் வாங்குவது போன்ற நற்செயல்களைச் செய்!

- உன் வேலைகள் அனைத்திலும் அவர்களிடம் ஆலோசனை செய்! அவர்களின் கருத்துக்கு மாறு செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானால் அது பற்றி வருத்தம் தெரிவித்து விடு!

- அவர்களின் அழைப்புக்கு விரைவாக புன்னகைத்த முகத்துடன், “ஆம் அம்மா, ஆம் அத்தா” என்று கூறி பதில் கொடு!

- அவர்களின் நண்பர்களையும் உறவினர்களையும் அவர்கள் இருவரும் உயிரோடு இருக்கும் போதும் மரணித்த பின்பும் கண்ணியப்படுத்து!

- அவர்களிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருக்காதே! அவர்களின் கருத்தை தவறு என்று நேரடியாகச் சொல்லாமல் சரியான கருத்தை ஒழுக்கத்துடன் அவர்களுக்கு விளக்கிச் சொல்ல முயற்சி செய்!

- அவர்களிடம் பிடிவாதம் பிடிக்காதே! அவர்களுக்கு முன் சப்தத்தை உயர்த்திப் பேசாதே! அவர்கள் பேசுகின்ற போது வாய்மூடி இரு! அவர்களிடம் ஒழுக்கத்துடன் நடந்துகொள்! உன் சகோதர சகோதரிகளில் எவரையும் அடிக்காதே! விரட்டாதே! இதுவும் உன் பெற்றோருக்கு செய்ய வேண்டிய மதிப்பில் அடங்கும்!

- அவர்கள் உன்னிடம் வந்தால் அவர்களின் பக்கம் எழுந்து செல்! அவர்களின் தலையை முத்தமிடு!

- வீட்டில் உன் தாயாருக்கு உதவி செய்! உன் தந்தையின் வேலையில் அவருக்கு உதவுவதில் தாமதிக்காதே!

- முக்கியமான காரியம் என்றாலும் அவர்கள் உனக்கு அனுமதி வழங்காவிட்டால் பயணம் செல்லாதே! அப்படிப் பயணம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் அவர்களிடம் வருத்தம் தெரிவித்து விடு! அவர்களை விட்டும் உன் கடிதத் தொடர்புகளைத் துண்டித்துக்கொள்ளாதே!

- அனுமதியில்லாமல் அவர்கள் இருக்கின்ற இடத்தில் நுழையாதே! குறிப்பாக, அவர்கள் உறங்கும் நேரத் திலும் ஓய்வெடுக்கும் நேரத்திலும் நுழையாதே!

- புகை பிடிக்கும் பழக்கத்தால் நீ பீடிக்கப்பட்டவனாக இருந்தால் அவர்கள் முன்னிலையில் புகை பிடிக்காதே!

- அவர்கள் சாப்பிடுவதற்கு முன் நீ உணவு உண்ணாதே! உண்ணுவதிலும் பருகுவதிலும் அவர்களுக்கு மரியாதை செய்! அவர்களை முற்படுத்து!

- அவர்கள் இருவரிடத்திலும் பொய் பேசாதே! உன்னைக் கவராத எந்தச் செயலையாவது அவர்கள் செய்தால் அவர்களைப் பழித்துப் பேசாதே!

- உன் மனைவியையோ பிள்ளைகளையோ அவர்களை விட அதிகமாகச் சிறப்பிக்காதே! எல்லாவற்றுக்கும் முன்பாக அவர்களின் திருப்தியையே தேடு! ஏனென்றால், அல்லாஹ்வின் திருப்தி பெற்றோரின்

திருப்தியில் உள்ளது. அவனுடைய வெறுப்பு அவர்களின் வெறுப்பில் உள்ளது.

- அவர்கள் இருக்கின்ற இடத்தைவிட உயர்வான இடத்தில் உட்காராதே! அவர்கள் முன்னிலையில் உன் கால்களைப் பெருமையாக நீட்டாதே!
- உன் தந்தை பெயருடன் உன் பெயரைச் சேர்த்துச் சொல்வதையும் எழுதுவதையும் மதிப்புக் குறைவாக நினைக்காதே! நீ ஒரு பெரிய அதிகாரியாக இருந்தாலும் கூட அவ்வாறு எண்ணாதே! மேலும், அவர்கள் உனக்குச் செய்த நன்மையை மறுத்துப் பேசுவது அல்லது ஒரு வார்த்தையானாலும் அதன் மூலம் அவர்களை மனவேதனை அளிப்பது பற்றி எச்சரிக்கையாக இரு!
- உன் பெற்றோருக்குச் செலவு செய்வதில் அவர்கள் உன்னைப் பற்றி முறையிடுகிற அளவுக்குக் கஞ்சத்தனம் செய்யாதே! இது உனக்கு இழிவாகும். “நீ எவ்வாறு பிறரிடம் நடந்துகொள்கிறாயோ அவ்வாறே உன்னிடம் நடந்து கொள்ளப்படும்” என்ற அறிவுரைக்கேற்ப இச்செயலின் பலனை உன் பிள்ளைகளிடம் பின்பு நீ காண்பாய்!
- நீ தனி வீட்டில் வசித்தால் பெற்றோரைச் சந்திப்பதை அதிகப்படுத்திக்கொள்! அவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்குவதையும் அதிகமாக்கிக்கொள்! உன்னை வளர்த்ததற்காகவும் உனக்காக அவர்கள் எடுத்துக் கொண்ட சிரமத்துக்காகவும் அவர்களுக்கு நன்றி செய்! உன் பிள்ளைகள் மூலமும் அவர்களிடம் நீ காணுகின்ற கடுமை மூலமும் உன்னை வளர்க்க உன் பெற்றோர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்கள் என்று படிப்பினை பெற்றுக்கொள்!

- கண்ணியப்படுத்துவதற்கு மிகத் தகுதியானவர் உன் தாய்தான். பிறகு உன் தந்தை. மேலும், "சொர்க்கம் தாய்மார்களின் பாதங்களுக்குக் கீழே உள்ளது" என்பதை அறிந்துகொள்!

- பெற்றோரைத் துன்புறுத்துவது, அவர்களின் கோபத்திற்கு உள்ளாகுவது பற்றி எச்சரிக்கையாக இரு! அப்படி நடந்துவிட்டால் இவ்வுலகிலும் மறுமையிலும் நீ துர்பாக்கியசாலியாகிவிடுவாய். பின்பு உன் பிள்ளைகளும் நீ உன் பெற்றோருடன் எப்படி நடந்து கொண்டாயோ அப்படியே உன்னுடன் நடந்து கொள்வார்கள்.

- உன் பெற்றோரிடம் எதையேனும் கேட்டால் அதை மென்மையாகக் கேள்! நீ கேட்டதைக் கொடுத்தால் அவர்களுக்கு நன்றி சொல்! கொடுக்காவிட்டால் அவர்கள் கூறுகின்ற காரணத்தை ஏற்றுக்கொள்! அவர்களை நீ துன்பத்திற்கு உள்ளாக்காதிருக்கும் பொருட்டு உன் கோரிக்கைகளையும் தேவைகளையும் அதிகமாக்காதே!

- நீ உன் வாழ்வாதாரத்தைச் சம்பாதிப்பதற்குச் சக்தி பெற்று விட்டால் நீ உழைத்து, வேலை செய்து உன் பெற்றோருக்கு உதவி செய்!

- உன் பெற்றோருக்கு உன் மீது உரிமை இருக்கிறது. உன் மனைவிக்கும் உன் மீது உரிமையிருக்கிறது. ஆகவே, ஒவ்வொருவருக்கும் அவருடைய உரிமையைக் கொடுத்துவிடு! பெற்றோரும் மனைவியும் கருத்து வேறுபாடு கொண்டால் இருவருக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சி செய்! இருதரப்புக்கும் இரகசியமாக அன்பளிப்புகளை வழங்கு!

- *உன் பெற்றோர் இருவரும் உன் மனைவியுடன் வாக்கு வாதம் செய்துகொண்டால் மதிநுட்பமுள்ளவனாக நீ நடந்துகொள்! உன் மனைவி பக்கம் நியாயம் இருந்தால் நீ அவள் பக்கம்தான் என்றும், அதேசமயம் பெற்றவர் களைத் திருப்திப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்தில் தாம் இருப்பதாகவும் விளக்கிச் சொல்லிவிடு!*
- *திருமணம் செய்வது, மணவிலக்குச் செய்வது ஆகியவற்றில் உன் பெற்றோருடன் நீ கருத்துவேறுபாடு கொண்டால் மார்க்கத்தீர்ப்பை நாடு! அதுவே உனக்குச் சிறந்த உதவியாக இருக்கும்.*
- *பெற்றோர் செய்கின்ற துஆ (பிரார்த்தனை) அங்கீ கரிக்கப்படும். அது நன்மையை வேண்டி இருந்தாலும் சரி, அல்லது தீமையை வேண்டி இருந்தாலும் சரி! எனவே, உனக்கெதிராக அவர்கள் தீங்கை வேண்டி துஆ செய்து விடுவது பற்றி எச்சரிக்கையாக இரு!*
- *பிற மக்களோடு ஒழுக்கத்துடன் நடந்துகொள்! ஏனெனில், ஒருவர் மற்றவரைத் திட்டினால் அவரும் திட்டுவார்.*

  *நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: “ஒரு மனிதன் தன் பெற்றோரைத் திட்டுவது பெரும்பாவங்களில் ஒன்றாகும். அம் மனிதன் இன்னொரு மனிதனின் தந்தையைத் திட்டுவான். அதற்கவன் இவனுடைய தந்தையைத் திட்டுவான். இன்னொரு மனிதனின் தாயாரைத் திட்டுவான்; அதற்கவன் இவனது தாயாரைத் திட்டுவான்.”*

  *(ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)*
- *உன் பெற்றோரை அவர்கள் வாழும் போதும்*

*அவர்களுடைய மரணத்திற்குப் பின்பும் சந்தித்துக் கொண்டிரு! (இறந்தபின் சந்திப்பது என்பது அவர்களின் கப்ருகளுக்குச் சென்று வருவதாகும்.) அவர்களுக்கு நன்மை சேருவதற்காகத் தர்மமும் செய்து கொண்டிரு!*

رَّبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيٰنِيْ صَغِيْرًا

*“என் இறைவனே! என்னையும் என் பெற்றோரையும் மன்னித்திடு! அவர்களிருவரும் என்னைச் சிறுபிராயத்தில் அன்போடு வளர்த்தது போல் நீ அவர்கள் இருவரிடமும் கருணை காட்டு!” (அல்குர்ஆன் 17:24) என்று அவர்களுக்கு அதிகமாக துஆ செய்!*

رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَ ذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّ اجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

*“எங்கள் இறைவனே! எங்கள் ஜோடிகளிடமிருந்தும் எங்கள் சந்ததிகளிடமிருந்தும் எங்களுக்குக் கண்குளிர்ச்சியை (மகிழ்ச்சியை) வழங்கு! மேலும், எங்களை இறையச்சமுள்ள வர்களுக்கு வழிகாட்டியாக ஆக்கிவை!”(அல்குர்ஆன் 25:74)*

رَبِّ اغْفِرْلِيْ وَلِوَالِدَيَّ وَلِمَنْ دَخَلَ بَيْتِيَ مُؤْمِنًا
وَّلِلْمُؤْمِنِيْنَ وَ الْمُؤْمِنٰتِ ؕ

*என் இறைவனே! எனக்கும் என் தாய் தந்தைக்கும், நம்பிக்கை கொண்டவனாக என் வீட்டில் நுழைந்த வனுக்கும், (வீட்டில் நுழையாத மற்ற) நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும், நம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் நீ மன்னிப்பு வழங்கு! (அல்குர்ஆன் 71:28)*

رَبِّ اجۡعَلۡنِىۡ مُقِيۡمَ الصَّلٰوةِ وَمِنۡ ذُرِّيَّتِىۡ‌ ۖ رَبَّنَا وَتَقَبَّلۡ دُعَآءِ ۝٤٠

என் இறைவனே! என்னையும், என் சந்ததிகளையும் (உன்னையே) தொழுது வருபவர்களாக ஆக்கி வை! எங்கள் இறைவனே! என் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்!

(அல்குர்ஆன் 14:40)

رَبَّنَا اغۡفِرۡ لِىۡ وَلِـوَالِدَىَّ وَلِلۡمُؤۡمِنِيۡنَ يَوۡمَ يَقُوۡمُ الۡحِسَابُ ۝٤١

எங்கள் இறைவனே! எனக்கும், என் தாய் தந்தைக்கும், அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட மற்றவர்களுக்கும் கேள்வி கணக்கு நிறைவேறுகின்ற (மறுமை) நாளில் மன்னிப்பை வழங்கு! (அல்குர்ஆன் 14:41)

رَبِّ اَوۡزِعۡنِىۡۤ اَنۡ اَشۡكُرَ نِعۡمَتَكَ الَّتِىۡۤ اَنۡعَمۡتَ عَلَىَّ وَعَلٰى وَالِدَىَّ
وَاَنۡ اَعۡمَلَ صَالِحًا تَرۡضٰٮهُ وَاَدۡخِلۡنِىۡ بِرَحۡمَتِكَ فِىۡ عِبَادِكَ الصّٰلِحِيۡنَ ۝١٩

என் இறைவனே! நீ என் மீதும், என் தாய் தந்தை மீதும் புரிந்த உன் அருள்களுக்கு உனக்கு நான் நன்றி செலுத்த நீ அருள் புரிந்திடு! உனக்குத் திருப்தி தரக்கூடிய நற்செயல்களையும் நான் செய்ய(க்கூடிய பாக்கியத்தை எனக்கு) அருள் புரிந்து, உன் கருணையைக் கொண்டு உன் நல்லடியார்களுடனும் என்னைச் சேர்த்திடு!

(அல்குர்ஆன் 27:19)

رَبِّ هَبۡ لِىۡ مِنۡ لَّدُنۡكَ ذُرِّيَّةً طَيِّبَةً ‌ ۚ اِنَّكَ سَمِيۡعُ الدُّعَآءِ ۝٣٨

என் இறைவனே! உன் புறத்திலிருந்து எனக்கொரு நல்ல சந்ததியை வழங்கு! நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவியேற்பவன். (அல்குர்ஆன் 3:38)

رَبِّ لَا تَذَرْنِيْ فَرْدًا وَّ اَنْتَ خَيْرُ الْوٰرِثِيْنَ ﴿٨٩﴾

என் இறைவனே! நீ என்னை(ச் சந்ததியற்ற) தனித்தவனாக ஆக்கிவிடாதே! நீயோ வாரிசாகக்கூடியவர்களில் மிக்க மேலானவன். *(அல்குர்ஆன் 21:89)*

قَالَ رَبِّ اَوْزِعْنِيْٓ اَنْ اَشْكُرَ نِعْمَتَكَ الَّتِيْٓ اَنْعَمْتَ عَلَيَّ وَعَلٰى
وَالِدَيَّ وَاَنْ اَعْمَلَ صَالِحًا تَرْضٰىهُ وَ اَصْلِحْ لِيْ فِيْ ذُرِّيَّتِيْ
اِنِّيْ تُبْتُ اِلَيْكَ وَ اِنِّيْ مِنَ الْمُسْلِمِيْنَ ﴿١٥﴾

என் இறைவனே! நீ என் மீதும், என் தாய் தந்தை மீதும் புரிந்த அருளுக்காக உனக்கு நான் நன்றி செலுத்தி, உன் திருப்தியை அடையக்கூடிய நற்செயல்களைச் செய்யும் படி(யான நல்லறிவை) நீ எனக்குத் தந்தருள்! எனக்கு உதவியாக இருக்கும்படி என் குடும்பத்தைச் சீர்திருத்திவை. நிச்சயமாக நான் உன்னையே நோக்கினேன். (உனக்கு) முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களில் நானும் ஒருவன்.
*(அல்குர்ஆன் 46:15)*

رَبَّنَا اغْفِرْلَنَا وَلِاِخْوَانِنَا الَّذِيْنَ سَبَقُوْنَا بِالْاِيْمَانِ وَلَا تَجْعَلْ
فِيْ قُلُوْبِنَا غِلًّا لِّلَّذِيْنَ اٰمَنُوْا رَبَّنَآ اِنَّكَ رَءُوْفٌ رَّحِيْمٌ ﴿١٠﴾

எங்கள் இறைவனே! எங்களையும் நீ மன்னித்தருள்! எங்களுக்கு முன் நம்பிக்கை கொண்ட எங்கள் சகோதரர்களையும் மன்னித்தருள்! நம்பிக்கை கொண்டவர்களைப் பற்றி எங்கள்

*உள்ளங்களில் குரோதங்களை உண்டுபண்ணாதே! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிகக் கருணை உடையவன், இரக்கமுடையவன்! (அல்குர்ஆன் 59:10)*

*(நிறைவுற்றது)*